Registered as a Newspaper பக்கங்கள்: [illegible] விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆவணி 12 | 28-08-94 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 191

## 3 இலட்சம் வாக்காளர் பெயர் பட்டியலிலிருந்து ஐ.தே.க. நீக்கியது

வாக்களிக்கத் தகுதி பெற்ற மூன்று லட்சத்திற்கு மேற்பட்ட வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதாகவும் இது குறித்து உடனடியான விசாரணை மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார். இது தொடர்பான தகவல்களை நீதி, அரசியல் துறை அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் பெற்றுள்ளதாகவும் இதனைத் தொடர்ந்து விசாரணையைத் துரிதப்படுத்த தாம் முடிவெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (6ஆம் பக்கம் பார்க்க)

# அரசு யுத்த நிறுத்தம் குறித்து முடிவு எதையும் எடுக்கவில்லை

## ஹமில்டன் வனசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

**யுத்த நிறுத்தம் குறித்து அரசு இன்னமும் எந்த முடிவும் எடுக்கவில்லை. யுத்த நிறுத்தம் குறித்து அரசு ஏதேனும் முடிவுக்கு வந்தால் பாதுகாப்புப் படையினர் அதற்கேற்ப நடந்து கொள்வர் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவித்தார்.**

விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்தம் செய்வது குறித்து அரசு இன்னமும் எந்த முடிவும் எடுக்காமையினால் வடக்கு - கிழக்கில் நிலை கொண்டுள்ள படையினர் அன்றாட கடமைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருவர் என்றும் ஜெனரல் ஹமில்டன் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்த நிறுத்தம் அமுல் செய்யப்படுவது குறித்து யாராவது உங்களுடன் பேசியுள்ளார்களா? எனக் கேட்ட போது, உத்தியோக பூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை என ஹமில்டன் வனசிங்க தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக மீண்டும் ஹமில்டன் வனசிங்க நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## படையினருக்கு யுத்தம் மட்டுமல்ல தீர்வை அமுலாக்குவதும் கடமையே

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த

(கொழும்பு)

பாதுகாப்பு படையினருக்கு யுத்தம் புரிவதுமட்டும் கடமையல்ல, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்பட்டால் அதை முழுமையாக அமுல்படுத்தவும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இதுவும் படையினரின் கடமையாகும். இவ்வாறு கடந்த புதனன்று பாதுகாப்பு அமைச்சிற்கு சென்று தனது பொறுப்புகளை எடுத்துக்கொண்டபின் படை அதிகாரிகளின் மத்தியில் பேசிய சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

நான் இந்த அமைச்சுக்கு புதியவனல்ல. இந்தப் போர் ... பொருளாதார அபிவிருத்திக்கு தடையாக உள்ளது. எனவே இதற்கு கூடிய விரைவில் தீர்வு காணவேண்டும் என்றார்.

அங்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தனது வரவேற்புரையில் எமக்கு இது வரை பிரதி அமைச்சர் இல்

## விசேட படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை நாளை திங்கட்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறுமெனவும், செவ்வாய், புதன்கிழமைகளில் படகுச் சேவை வழமைபோல் நடைபெறும் எனவும் அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

## வரவு செலவு திட்டம் அக்டோபரில்

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் சமர்ப்பிக்கப்படுமென நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நிதியமைச்சரான, பிரதம மந்திரி சந்திரிகா குமாரணதுங்கா, நிதியமைச்சு அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து வருவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதக் கொள்வனவு இடை நிறுத்தம்

## பாணின் விலை குறைப்பில் பிரச்சினை எதுவுமில்லை


### விரைவில் அமுலாகும் என்கிறார் அமைச்சர்

(கொழும்பு)

கோதுமை மாவை இறக்குமதி செய்யும் வர்த்தக பிரமுகர்களுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் பயனாக பாணின் விலை குறைப்பதில் எவ்வித பிரச்சினையும் இராது இன்னும் சில தினங்களில் அமைச்சரவையின் அனுமதி பெற்று பாணை ரூபா 3.50க்கு விநியோகிக்கநடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக வாணிப உணவு அமைச்சர் கிங்ஸ்லி டி விக்கிரமரட்ண கூறியுள்ளார்.

தமது அமைச்சின் செயலாளர்களிடையில் பேசிய அவர் கோதுமை மா, சீனி, பருப்பு, கருவாடு, பாலுணவு என்ப

(6ஆம் பக்கம் பார்க்க)



முதலாவது பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் உருவப்படம் தாங்கிய டோறா வடிவிலான ஊர்தி பவனியின் போது எடுக்கப்பட்ட படம்

## கப்டன் அங்கயற்கண்ணிக்கு உணர்வுபூர்வ அஞ்சலி

யல்ல, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்பட்டால் அதை முழுமையாக அமுல் படுத்தவும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இதுவும் படையினரின் கடமையாகும். இவ்வாறு கடந்த புதனன்று பாது...காரிகளின் மத்தியில் பேசிய சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

நான் இந்த அமைச்சுக்கு புதியவனல்ல. இந்தப் போர் ... இதற்கு கூடிய விரைவில் தீர்வு காணவேண்டும் என்றார்.

அங்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தனது வரவேற்புரையில் எமக்கு இதுவரை பிரதி அமைச்சர் இல்லாதகுறை இப்போது நீக்கப்பட்டுள்ளது. இது எமக்கு பெரும் தைரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இவர் எமக்கு புதியவருமல்ல என்றார். புதிய பிரதிபாதுகாப்பு அமைச்சரை அமைச்சின் செயலாளரான ஹமில்டன் வெற்றிலை கொடுத்து வரவேற்றார்.

...கள் தெரிவித்துள்ளன.

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதக் கொள்வனவு இடைநிறுத்தம்

(கொழும்பு)

சிறிலங்கா பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க இராணுவ தளபாடங்களுக்கென, ரஷ்யாவுடன் செய்துகொள்ளப்பட்ட 280 கோடி ரூபா கொள்வனவு தொடர்பான ஒப்பந்தத்தை இடைநிறுத்தி

(6ஆம் பக்கம் பார்க்க)

# காங்கேசன் சீமெந்து ஆலை 60கோடி செலவில் திருத்தம்

## அமைச்சர் நிமால் சிறிபால தெரிவிப்பு

(கொழும்பு)

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை 60 கோடி ரூபாவில் புனரமைக்கப்பட்டு வருவதாகவும், விரைவில் உற்பத்தியை ஆரம்பிக்கக் கூடியதாக இருக்குமெனவும், வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் பொது வசதிகள் துறை அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறையிலுள்ள சிறிய சீமெந்து தொழிற்சாலையே இப்போது புனரமைக்கப்பட்டு வருவதாகவும், அங்குள்ள இரண்டு தொழிற்சாலைகளும் இயங்க ஆரம்பிப்பின், இலங்கையின் தேவைக்கும் மிகையானவகையில், சீமெந்து

(6ஆம் பக்கம் பார்க்க)

# ரஷ்ய போர் தளபாடங்கள் கொழும்பு வந்து சேர்ந்தன

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட பெருமளவு ரஷ்யத் தயாரிப்பு இராணுவத் தளபாடங்கள் சென்றவாரம் கொழும்பு வந்தடைந்ததாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்யப்படையினரால் பாவிக்கப்பட்ட 280 கோடி ரூபா பெறுமதியான இராணுவத் தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் கடந்த இரண்டு மாதங்களிற்கு முன்னர் செய்துகொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொள்வனவு செய்யப்பட்டவற்றில் சில வாகனங்கள் கடந்த வாரம் கொண்டுவரப்பட்டதாகவும் உலங்கு வானூ

(6ஆம் பக்கம் பார்க்க)

# இரு போராளிகள் விபத்தில் வீரச்சாவு

முல்லை மாவட்டத்தில் கடந்த 24-ம் திகதியன்று ஏற்பட்ட விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார். வீரச்சாவடைந்த மணலாறு கோட்டப் பொறுப்பாளர்

(6ஆம் பக்கம் பார்க்க)



கப்டன் தமிழ்வேந்தன் (சதீஸ்)



வீரவேங்கை செந்தமிழன்

பாதாள உலக தலைவன்

# சொத்தி உபாலி, சோமே பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

பாதாள உலகத் தலைவர் எனக் கூறப்படும் சொத்தி உபாலியும், சொர்ணபால எனப்படும்மொட்டை சோமேயும் கொழும்பு மேலதிக நீதவானால் கடந்த புதனன்று பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களுக்கு பத்தாயிரம் ரூபா ரொக்கப் பிணையும், ஒரு லட்சம் ரூபா உறுதிப் பிணையும் வழங்கப்பட்டது.

(6ஆம் பக்கம் பார்க்க)

# குடியிருப்புமீது ஷெல் வீச்சு பத்தமேனியில் ஒருவர் பலி

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து அச்சுவேலி குடியிருப்பு மீது இராணுவத்தினர் நேற்று முன்தினம் மாலை 5.00 மணியளவில் பல ஆட்லறி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலின் போது பத்தைமேனி வயிரவர் கோயிலடியில் விழுந்த மூன்று ஆட்லறிகளுக்கு ஒரு வயோதிபர் ஸ்தலத்தில் பலியானார். மேலும் இருவர் படுகாயம

(6ஆம் பக்கம் பார்க்க)

# கப்டன் அங்கயற்கண்ணிக்கு உணர்வுபூர்வ அஞ்சலி

காங்கேசன்துறை துறைமுகத்தினுள் சென்று சிறிலங்கா கடற்படையின் மிதக்கும் கோட்டையாகிய கட்டளை இடும் தலைமைத் தாய்க்கப்பலையும் டோறா பீரங்கிப் படகினையும் தகர்த்தெறிந்து வீரசாதனை படைத்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட முதற்பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி நினைவாக நேற்று எழுச்சிதினம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

வீதிகள், பொது இடங்கள், இல்லங்கள் என்பவற்றில் கப்டன் அங்கயற்கண்ணியின் உருவப்படங்கள்வைக்கப்பட்டு சுடரேற்றப்பட்டதுடன், மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

பிரதான வீதிகளில் சிவப்பு மஞ்சள்நிற தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்ததுடன் கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன. பிரதான இடங்களிலும்போராளிகளின் பாசறைகளிலும் அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டு கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் உருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

பிரதான சந்தியில் ஒலிபெருக்கிகள் கட்டப்பட்டு கரும்புலிகளது எழுச்சிப்பாடல்கள் இசைக்கப்பட்டன.

தனியார் கல்வி நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் என்பன இயங்கவில்லை. சிற்றூர்திமற்றும்முச்சக்கரவண்டி சேவைகளும் நிறுத்தப்பட்டிருந்தன.

## முதற் பெண் கடற்கரும்புலிக்கு

# மகளிர் படை அணியினர் அணிவகுத்து மரியாதை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகத்தினுள் ஊடுருவி சிறிலங்கா கடற்படையின் கட்டளை இடும் தாய்க் கப்பலையும், டோறா படகையும் சிதறடித்து கடலினுள் மூழ்கடித்து சாதனை படைதத கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி அவர்களின் மாவீர வீரவணக்கக் கூட்டமும், வெற்றி விழாவும் வலிகாமம் பிரிவினரால் மானிப்பாய் மாவீரர் அரங்கில் எழுச்சியுடன் உணர்வு பூர்வமாக கொண்டாடப்பட்டது.

இவ் வெற்றி விழா நிகழ்விற்கு தீவக மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி மாமகள் தலைமை தாங்கி

(6ஆம் பக்கம் பார்க்க)

# கடலிலும் சாதனை படைக்கலாம் என நிரூபித்த கப்டன் அங்கயற்கண்ணி

## கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை உரை

(யாழ்ப்பாணம்)

''கடற்பரப்பிலும் ஒரு வரலாற்று சாதனையைப் படைக்க முடியும் கடலிலும் தங்களுடைய போராட்ட நிகழ்வை வலுவேற்ற முடியும் என்பதை கப்டன் அங்கயற்கண்ணி எடுத்துக் காட்டியுள்ளார்''.

மானிப்பாய் மாவீரர் கலையரங்கில் நேற்று மாலை இடம் பெற்ற கப்டன் அங்கயற்கண்ணியின் நினைவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது கடற்புலிகளின் விசேட தளபதி திரு. சூசை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

''இரண்டு ஆண்டுகளுக்கு முதல் குறிப்பாக சென்ற ஆண்டுக்கு முதல் பூநகரி கடல் நீரேரியில் இயற்கையினுடைய சீற்றத்தினாலும் சிறிலங்கா கடற்படையினா

(6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

**பாலர் ஆசிரியராக....**

விரைவில் டயிர்சி-க.பொ.த(சா/த) கடைசித் தகைமை -சனி, ஞாயிறு நேரில் கற்க முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம் பாலர் ஆசிரியர் சங்கம் உயர்கலைகல்லூரி 73, பருத்தித்துறைவீதி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (9212)

**ஜெயா அழகு மாடம்**

விற்பனை அகமும் காட்சி அகமும் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திற்கு வடக்கு வீதியில் அமைந்துள்ளது என்பதை வாடிக்கையாளர்கட்கு அறியத் தருகிறோம். [சி-10159)

## 55 ஆசிரியர்கள் சித்தி

(பருத்தித்துறை)

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கான தொலைக்கல்விப் பயிற்சி நெறிப் பரீட்சையில் பருத்தித்துறை கல்விக் கோட்டத்திலிருந்து தோற்றிய ஆசிரியர்கள் 55 பேர் சித்தியடைந்துள்ளனர் 12பேர் நூன சித்தி பெற்றனர். யாழ் மாவட்டத்திலிருந்து இப் பரீட்சைக்குத் தோற்றிய பயிலுநர் ஆசிரியர்களில் பருத்தித்துறை கல்விக் கோட்டப் பகுதியிலிருந்தே கூடுதல் ஆசிரியர்கள் சித்தியெய்தி யாழ்.மாவட்டத்தில் முன்னணியில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (25)

## பொன்னாலை தேர் உற்சவம்

(தொல்புரம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் ஆலயத்தின் வருடாந்த ஆவணி உற்சவம் கடந்த 13 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மேலும் நாளை திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க் கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (41)

## பொது அறிவித்தல்

### யாழ்ப்பாண மாநகரசபை

(மாநகரசபை 252 - ம் அத்தியாய கட்டளைச்சட்டத்தின் 247 C பிரிவு)

கீழ்க்காணப்படும்அட்டவணையில்விபரிக்கப்பட்டுள்ள உயர் தொழில்களை யாழ் மாநகரசபை எல்லைக்குள் நடத்திவரும் உரிமையாளர்கள் 31-12-93 வரை தொழில் மூலம் பெற்றுக்கொண்ட மொத்தப்பெறுகைகளை யாழ் மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியில் பெறப்படும் உரிய படிவத்தில் 15-09-94-க்கு முன்னர் வெளிப்படுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**உயர் தொழில் பற்றிய அட்டவணை**

1. தனியார் கல்வி நிலையங்கள்
2. தனியார் மருந்தகங்கள்
3. தனியார் பாடசாலைகள்
4. தனியார் வைத்தியசாலைகள்
5. வைத்திய சேவையாளர்கள்
6. முதல் வழங்குநர்கள்
7. கடன் வழங்குநர்கள்
8. ஏலதாரர்களும், தரகர்களும்
9. நகை அடைவு பிடிக்கும் நிலையங்கள்
10. ஒப்பந்தகாரர்கள்
11. சட்ட ஆலோசகர்கள், நொத்தாரிசுகள்
12. இவை போன்ற ஏனையோர்.

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 25-8 94

(சி-10189)

## பகிரங்க அறிவித்தல்

### தமிழீழ மாவட்ட நீதிமன்று

பருத்தித்துறை(வதிரி)

சந்தசாமி பாதசிவம்
போக்காலைவீதி
இமையாணன்
உடுப்பிட்டி

வழக்கு இல: 9- விவாகரத்து வழக்காளி

எதிர்

சந்தசாமி பரதசிவம் பெண் சுமதி
மே/பா- ந. சதீஸ்குமார்
AANCHER STR-21
MUNCHEN GLAKPARK
GERMANY

எதிராளி

இத்தால் சகலருமறிக உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த கந்தசாமி பரதசிவம் ஆகிய இவ்வழக்கின் வழக்காளி அதே ஊரைச்சேர்ந்த தற்காலம் ஜேர்மனி நாட்டில் வசிக்கும் சந்தசாமி பரதசிவம் பெண் சுமதி என்னும் மேற்படி எதிராளிக் கெதிராக மேற்படி நீதிமன்றில் ஒரு விவாகரத்து வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

1989-ம் ஆண்டு வைகாசி மாதம் 25-ம் திகதி தனக்கும் மேற்படி எதிராளிக்குமிடையில் நடைபெற்ற பதிவுத் திருமணத்தால் ஏற்பட்ட திருமணஉறவை

## எழுதுவினைஞர் தேவை

கல்வித் தகைமைகள்:- க. பொ. த சாதாரண தரப் பரீட்சையில் கணிதத்தில் திறமைச் சித்தி இருத்தல்வேண்டும்; க. பொ, த உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட சித்தியடைந்திருத்தல் வேண்டும்;

அனுபவம்:- குறைந்தது 2 வருடங்கள் எழுதுவினைஞராக கடமையாற்றிய அனுபவமுள்ளவராய் இருத்தல் வேண்டும் அல்லது அரசாங்கத் திணைக்களத்தில் கடமையாற்றி இருத்தல் வேண்டும்.

சம்பளம்;- பேசித் தீர்மானிக்கப்படும்.

வயது-: 40 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

இத்தகைமைகளுடன் மக்கள் நன்மதிப்புப் பெற்ற இருவரின் சிபார்சுக் கடிதத்துடன் 31 - 8- 1994 அன்று புதன்கிழமை 10மணிக்கும் 12மணிக்கும் இடையில் தலைமைக் காரியாலயத்திற்கு நேரில் சமுகமளிக்கவும்.

ந. பாலவிநாயகர்
செயலாளர்

யாழ். மாவட்ட வெதுப்பக
உரிமையாளர் சங்கம்
183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(சி-10188)

## 2- ம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு:
16. 06. 1977

வீரச்சாவு:
28. 08. 1992

### லெப். தொல்காப்பியன்

(சுப்பிரமணியம் வசந்தரூபன்) (ரூபா)

(28. 08. 1992 அன்று பெரிய மண்டலாய் காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவடைந்தார்)

ரூபா என்ற செல்லமகன் நீ
இன்று தொல்காப்பியன் என்ற மாவீரனாய்
கல்லறையில் தூங்குகின்றாயோ
ஏனைய மாவீரர்களுக்கும் வீரஅஞ்சலிகள்

வசந்தகிரி
நீர்வேலி தெற்கு
நீர்வேலி

உன்பிரிவால் என்றும் வாடும்
அப்பா, அம்மா, அக்காமார், தம்பிமார், உறவின

## நினைவு கூருகின்றோம்...

**28 08. 1994.**

1988-ம் ஆண்டு இதே தினத்தில் இறால்குழியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**வீ. என். பீல்ட் - ரவி** (மாணிக்கராசா முரளிதரன் - ஆலங்கேணி - திருமலை)

1989-ம் ஆண்டு மணலாற்றில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். கிருஷ்ணா** (சுப்பையா இராசதுரை - படுக்குளம், பூவரசங்குளம் - வவுனியா)

1990ம் ஆண்டு யாழ் - கோட்டையில் 21. 8. 90 அன்று ஏற்பட்ட சமரில் விழுப்புண்ணடைந்து மருந்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் போது வீரச்சாவெய்திய,

**பிரதீபன்** (பெனடிக்ற் றெக்ஸன் -எழுத்தூர் - மன்னார்)

யாழ் - கோட்டையில் சிறீலங்கா இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**பவான்** (இராசன் இராசகுமார் - ஆட்டுப்பட்டி,துன்னாலை தெற்கு, கரவெட்டி - யாழ்)

அம்பாறை - வட்டமடுவில் சிறீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**மேகராசா** (- -- - கோணாவில், அக்கரைப்பற்று- அம்பாறை)

**செல்வன்** (--- காரைதீவு - அம்பாறை)

**கபில்** (- - - கல்லடி - மட்டு)

மட்டு - வந்தாறுமூலையில் சிறீலங்கா இராணுவத்தினரின் முகாம் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சின்னவன்** வேலுப்பிள்ளை தேவநாயகம் - களுவாஞ்சிக்குடி - மட்டு)

மட்டு-டோறிக்குடாவில் சிறீலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**அன்பு - அருள்** (சுப்பிரமணியம் ஜெயரட்ணம்- கரவெட்டி மேற்கு யாழ்)

1991ஆம் ஆண்டு திருமலை - வேப்பங்குளம் முகாமிலிருந்து வெளியேறிவந்த சிறிலங்கா இராணுவத்தினரை பன்குளம் பகுதியில் வைத்து வழிமடக்கி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய

**லெப். சிறிநாத்** (மயில்வாகனம் திருச்செல்வம் 592,செல்வநாயகபுரம் - திருமலை)

**2-ம் லெப்.பீற்றர்** (ஆறுமுகம் பகவத்சிங் 4-ம்கண்டம், பன்குளம் திருமலை)

**சுதா** (செபமாலை பிரிஸ் ஜெகதீஸ்வரன் -கன்னியா- திருமலை)

**சிறிமனோ** (கணபதிப்பிள்ளை ராஜன்- திருஞானசம்பந்தர் வீதி திருமலை)

1992ஆம் ஆண்டு வெற்றிலைக்கேணி -பெரியமண்டலாய்ப்பகுதியில் நடைபெற்ற சிறீலங்கா இராணுவத்தினரின் 09 காவலரண்கள் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் இதயன்** (பிரான்சிஸ் ஜேசுநேசன் - அரிப்பு புருங்கன் - மன்னார்)

**லெப். மன்றவாணன்** (கதிர்காமவேலன் சிறிகாந்தன் -மீசாலைவடக்கு-வேம்பிராய் -கொடிகாமம்)

**லெப். தொல்காப்பியன்** (சுப்பிரமணியம் வசந்

## அறிவித்தல்

தொழில்நுட்ப வியலாளர் (பயிலுனர்) தரம்-II பிரிவு 'பி' பதவிக்கான நியமனத்துக்காக 25-8-1994 அன்று நடாத்தப்பட்ட நேர்முகப்பரீட்சைக்குச் சமுகமளிக்க முடியாத பரீட்சார்த்திகள் எதிர்வரும் 31-8-1994 அன்று காலை 10 00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக சபை அறையில் நடைபெற இருக்கும் அடுத்த நேர்முகப்பரீட்சைக்கு தேவையான ஆவணங்களுடன் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

- பதிவாளர்

யாழ் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்

(சி10194)

---

பதிவுத் திருமணத்தால் ஏற்பட்ட திருமணஉறவை நீக்கி விவாகரத்து வழங்குமாறு மேற்படி வழக்காளி இவ்வழக்கில் கோரியுளளார்.

எனவே அவர் கோரியபடி அதன்மீது விளக்கம் ஒன்று நடத்துவதில் அல்லது விவாகரத்துத்தீர்வை ஒன்றை இம்மன்று வழங்குவதில் ஆட்சேபனை ஏதும் இருப்பின் இதில் அக்கறையுள்ள எவரும் இவ் அறிவித்தல் பத்திரிகையில் விளம்பரப்படுத்திய திகதியிலிருந்து ஒருமாத காலத்துக்குள் தமது ஆட்சேபனையை இம்மன்றில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**1994-ம் ஆண்டு ஆவணி மாதம் 24-ம்திகதி**
நீதிமன்றகட்டளைப்படி

பதிவாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று
பருத்தித்துறை

(9222)

---

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ து) சுன்னாகம்

## அறிவித்தல்

இடம்பெயர்ந்தோருக்கான யூலை முதல் இரு வாரத்துக்குரிய இலவச உலர் உணவு விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இலவச நிவாரணம் பெறுவோர் தங்கள் நிவாரணப் பொருள்களை 5-9-94-க்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.

பொதுமுகாமையாளர்
சுன்னாகப் பல. நோ. கூ. சங்கம்.

(27-8-94) (சி-10193)

---

## யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்

நடத்தும்

## மாவட்ட கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி - 1994

வயதுப்பிரிவுகள்:-

- ★ 18 வயதின் கீழ் பெண்கள்
- ★ 20 வயதின் கீழ் பெண்கள்
- ★ 18 வயதின் கீழ் ஆண்கள்
- ★ 20 வயதின் கீழ் ஆண்கள்

**விண்ணப்ப முடிவு தினம்:- 31-08-94 (புதன்கிழமை)**
(தாமதமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா)

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

செயலாளர்
யா. மா. அ. மெ. சங்கம்

(சி-10192)

---

நீர்வேலி
(9174)

மார், தம்பிமார், உறவினர்கள், நண்பர்கள்

---

## 45-ம் நாள் நினைவினிலே



பிறப்பு
27. 12. 1969

வீரச்சாவு
15. 07. 1994

### லெப். மயூரதி
(இராசரத்தினம் - ஜெயராணி)
(வேலணை கிழக்கு - 3ம் வட்டாரம்

மயூரதி புதுயுகம் படைக்கவென்று, புயலாகப்
புறப்பட்டு.
எதிரிக்கு அச்சுறுத்தும் வேவு புலியாக வீரம்
கொண்டாயே!
விடுதலைப் பாதையில் வீழ்ந்தாலும் வித்தாக
மடிந்தாலும் மக்களுக்காக
மார்பினிலே குண்டேந்தி மாவீரன் ஆகினாயே -மயூரா
களம் பல கண்டு வெற்றி வாகை பலவும் சூடி
பூநகரி முப்படைத் தளத்திலும் வெற்றி கொண்டாய்
மகிழ்வுடன் வீடு வந்து ... மீண்டு முல்லையில் வீர
காவியம் படைத்தாயே

28-08-94 (ஞாயிறு) இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியையில் போராளிகள, நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சி. இராசரத்தினம்
குடும்பத்தினர்

139, நாவலர் வீதி,
ஐந்து சந்தி
யாழ்ப்பாணம்

(9213)

---

**லெப். தொல்காப்பியன்** (சுப்பிரமணியம் வசந்தரூபன் -நீர்வேலி தெற்கு - யாழ்)

**கோமதன்** (மாணிக்கம் ஞானசேகரம் -மறவன்புலோ கைதடி-யாழ்)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் இலங்கை-இந்தியப்படையினராலும், தேசவிரோதசக்திகளினாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி- 10191

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
11-03-1972

வீரச்சாவு:
28-08-1992

### லெப். மன்றவாணன்
(கதிர்காமவேலன் சிறிகாந்தன்)

உயிர்ப்பூவை விடுதலைக்கு உரமாக்கினார்-இவர்
உதிரத்தால் தமிழீழம் சிவப்பாக்கினார்
உலகெங்கும் புலிவீரம் நிலையாக்கினார்-இவர்
ஒருநாளும் மறவாத சிலையாகினார்

மீசாலை வடக்கு,
வேம்பிராய். (9198)

நண்பர்கள், குடும்பத்தினர்.

நல்லூர் [illegible] யாழ்ப்பாணம்

# காந்தரூபன் அறிவுச்சோலை தடகள விளையாட்டுப் போட்டி '94

மாணவர்களின் தேகாரோக்கியத்தில் காந்தரூபன் அறிவுச்சோலை மிகுந்த கவனம் செலுத்துகின்றது என்பது அண்மையில் நிறைவேறிய இவ்வருடத் தடகள விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளிலிருந்து அறியக்கிடக்கின்றது. உடல் சுகநிலையிலிருந்தாலன்றி உளத் தொழிற்பாடு திறம்பட ஏற்பட முடியாதென்பதைக் கருத்திற்கொண்டு அறிவுச்சோலை நிர்வாகம் போட்டி நிகழ்ச்சிகளை நிறைவேற்றியிருக்கின்றது.

மாணவர்களின் முழுமையான பங்களிப்பைப் பெறும் இலக்கைக் கருத்திற்கொண்டு திட்டமிடப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் முதலங்கமாக வீதி ஓட்டம் இடம்பெற்றது. இவ் வீதியோட்டப் போட்டியில் முப்பதுக்கும் கூடுதலான வீரர்கள் பங்குபற்றினர்- ஏறத்தாழ 2½ கிலோமீற்றர் தூரத்தை ஓடிக் கடக்கும் போட்டி 10-08-94-ல்கோண்டாவில் அரசியல்துறை நடுவகப் பணிமனை முன்றலில் ஆரம்பமாயிற்று போட்டியாளர்த்தை நெருங்குமளவுக்கு வேகமாக ஆரம்பித்த வீதிஓட்டப் போட்டி தளர்வின்றி முடிவிடமான காந்தரூபன் அறிவுச்சோலை விளையாட்டுத்திடல் வரை விறுவிறுப்பாக அமைந்திருந்தமை சிறப்பம்சமாகும். போட்டியாளர்களைப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்த வாகனத்தில் மருத்துவ முதலுதவிப் பிரிவினர் போட்டியாளர்களைக் கண்காணித்தபடி வந்தனர். விளையாட்டரங்கில் போட்டி நிறைவுற்ற போது முதல் ஐந்து போட்டியாளரிடையே நெருக்கமான போட்டி இடம்பெற்றது. செல்வன் ப. ஸ்ரீவரதன் 13 நிமிடம் 37 செக்கன்களில் 2½ கிலோமீற்றரினை ஓடிக் கடந்த பின்னரும் உற்சாகமாகக் காணப்பட்டார் ஏனைய வீரர்களில் இருவர் மட்டுமே போட்டி முடிவுற்ற போது களைப்பு மேலிடக் காணப்பட்டனர்; ஏனையோர் சாதனைஒன்றினை நிலைநாட்டிய பெருமிதத்துடன் மைதானத்தை நிறைத்து நின்றனர். தடகளப் போட்டித் தொடக்கமே நிறைவு பெற்றமை,

கயிறிழுத்தல்வரை நிறைவேற்றப்பட்டன. துரிதமாகத் தவழும் நிகழ்ச்சிகளான குகை அஞ்சல், நீளம் பாய்தல் உயரம் பாய்தலும், வலுவை வளப்படுத்தக் குண்டு, தட்டு எறிதல் நிகழ்ச்சிகளும், வேகத்தை வென்றெடுக்க விரைவோட்ட நிகழ்ச்சிகளும், நரம்புத் தசைநார் ஒத்திசைவை வளர்க்க பல்வேறுபட்ட பவனைச் செயற்பாடுகளும், மகிழ்ச்சியையும் களிப்பையும் கொடுக்கும் குழுநிகழ்ச்சிகளும்; பலப்பரிசோதனையாகக் கயிறிழுத்தல் போட்டிகளும், கண்பார்க்க உடல் செயற்படவல்ல புதுமை சேர்ந்த தடையோட்ட நிகழ்ச்சிகளும் மேலாக ஆரம்ப இடைநிலைப் பாடசாலையொன்றில் தடைதாண்டல் நிகழ்ச்சி சட்ட வேலிகளைத் தாண்டிப் பாய வழங்கிய வாய்ப்பும் மாணவர்கள் பெற்ற புதிய அனுபவங்களெனலாம்.

குறிப்பிட்ட நிகழ்ச்சிகளின் தொகுப்பாக ஆகஸ்ட் இருபதில் இடம்பெற்ற இறுதிநாள் நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன கோலாகலமாக ஆரம்பித்த இறுதிநாள் போட்டியின் முதன்மை விருந்தினராக தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் பாண்ட் வாத்திய சகிதம் காந்தரூபன் நினைவாலய

விழாவின் ஆரம்பத்தை விமரிசையாக்கின. தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிச் சிறப்பிக்க முறையே பாடசாலைக் கொடியையும் இல்லக் கொடிகளையும், மாணவ முதல்வரும், இல்ல மாணவ தலைவர்களும் ஏற்றியமை மாணவ தலைமைத்துவப் பண்பை வளர்க்கும் கற்றல் முயற்சியாகப் புலப்பட்டது. கொடிகள் அரங்கில் பட்டொளிவீசிப்பறக்க, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச்சார்ந்த திரு பாலகுமாரன் ஏற்றி வைத்த ஒலிம்பிக் சுடர் இல்ல விளையாட்டுக் கழகத் தலைவர்களால் கைமாறி வந்து அரங்கில் அமைந்த பிரமாண்டமான ஒலிம்பிக் விளக்கினை ஒளியூட்டியது சத்தியப்பிரமாண வைபவத்தைத் தொடர்ந்து விளையாட்டரங்கில் அமைக்கப் பெற்ற காந்தரூபனின், பிரதிமைப்படத்திற்கு தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன். தியாகம் மலர்மாலை சூட்டியதும் முதன்மை விருந்தினர் போட்டியைத் தொடக்கி வைத்தார். அணிவகுப்புக்கலைப் போட்டிகள் தொடங்கின போட்டியின் போது இடையிடையே வழங்கப்பெற்ற வெற்றிச்சான்றிதழ்களை வீரர்கள் கல்வியியலாளர்கள்

## காந்தரூபன் அறிவுச்சோலை தடகளப் போட்டிகள் '94

| | |
|---|---|
| எல்லாளன் | 268½ புள்ளிகள் |
| சங்கிலியன் | 243½ புள்ளிகள் |
| பண்டாரவன்னியன் | 179 புள்ளிகள் |

கள் பொறுப்பாளர் ரமேஷ் அப்பா தலைமையில் போட்டித் தொடக்க இடத்தில் கூடினர்- எல்லாளன், சங்கிலியன், பண்டாரவன்னியன் இல்லப் பொறுப்பாசிரியர்கள் கலைச்செல்வன், ரொபின்சன், தமிழன் ஆகியோர் தத்தமது இல்ல வீரர்களைக் கோல உடைகளில் போட்டி இலக்கங்களை மார்பிலும், முதுகிலும் துளாம்பரமாகப் பொருத்திக் கொண்டு போட்டியிடவகை செய்தமை பலாலிவீதியால் வருவோர் போவோரைத் தொடக்கவிடத்தில் தரித்து நின்று பார்த்துச்செல்லத்தூண்டியது வீதியின் இருமருங்கிலும் பார்வையாளர்கள் கோண்டாவில் சந்திவரை நிறைந்து நின்றமை வீரர்களுக்கு புத்துணர்வையூட்டியது. சரியாக காலை 7-00 மணிக்கு வருகை தந்த யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி அவர்கட்கு நான்கு வரிசைகளில்

போட்டி நிர்வாகிகளை உற்சாகப்படுத்தியிருக்க வேண்டும் ஒரு வார இடைவேளையின் பின் இடம்பெற்ற இரண்டு நாள் தெரிவு நிகழ்ச்சிகளும், அதனைத் தொடர்ந்து ஒரு நாள் இடைவேளையின் மறுநாளான ஆகஸ்ட் இருபதில் இடம்பெற்ற காந்தரூபன் அறிவுச்சோலை இறுதிநாள் போட்டிகளும் போட்டி நிர்வாகிகளின் செயற்பாட்டின் செம்மையை புடமிட்டுக் காட்டின. ஆகஸ்ட் 17, 18 இல் நடைபெற்ற தெரிவு நிலைப் போட்டிகள், போட்டியாளரிடை இல்லரீதியான சவால்களைச் சந்திப்பவர்களைப் போல்போட்டியிட வைத்தது.

இதனை இல்லங்கள் ஈட்டிய புள்ளிகள் எடுத்துக் காட்டின ஒன்றையொன்று மருவி நின்றமை இல்ல,மாணவர்களிடையேயும் ஆசிரியர்களிடையேயும் மிகுந்த போட்டியுணர்வை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




முகப்பிலிருந்து தொடங்கிய அணிவகுப்பை ஆரம்பித்து வைத்துப் பின்னர் விளையாட்டரங்கில் அணிவகுப்பு

தமிழீழப் பெரியார்களின் கரங்களிலிருந்து பெற்றுக் கொண்டனர்.

பார்வையாளர் பந்தல்

அலங்காரத்தில் வெளிப்படுத்தியமை வெள்ளிடைமலை இடைவேளையின் பின் நிகழ்ந்த மாணவர் அஞ்சலோட்

# விளையாட்டு அரங்கு



ழ்ச்சியான ½ மணிநேரக் கராட்டிக் கண்காட்சியில் நிலைத்து நின்றது: கராட்டி நிகழ்ச்சி உடற்கல்வி முயற்சி என்பதை உறுதி செய்வது போல் செயற்பாட்டு வடிவங்கள் கட்டமைக்கப் பெற்றிருந்தன காந்தரூபன் அறிவுச் சோலை இடைவேளை நிகழ்ச்சியான 'கராட்டி உடலசைவு தற்பாதுகாப்பு உத்திகளைக் கல்வியோடு தொடர்புடையவர்கள்] தமிழீழப் பாடசாலைகளுக்கு அறிமுகம் செய்வதன் அவசியத்தை உணர்ந்தவர்போல் உரையாடினர். கராட்டிக் கண்காட்சியில் நிலைத்த கண்களைக் கலைப்பதற்கு வினோத ஆடைப்போட்டியாளர்கள் தரிசனம் தந்தனர் ஆமை குரங்கு, வேடன், பாரதியார், விறகுவெட்டி, போன்ற வேடங்கள் ஆதிகாலத்துக்குத்திரும்புதல் என்ற கல்விக்கொள்கையை வெளிக்காட்டுவது போல் அமைந்திருந்தன. இல்ல ஆசிரியர்களும் மாணவர்களும்தத்தமது கவண்ணத்தினை இல்ல

வில் பரிசளிப்பு வைபவம் இடம்பெற்றது.

காந்தருபன் அறிவுச்சோலை பொறுப்பாளர்ரமேஷ் அப்பா தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பில் உரையரங்கை அடுத்துச் சிறந்த நிகழ்ச்சிகளான

★ பந்துப்பரிமாற்றத்தினை

டாம், மூன்றாம் இடத்துக்கான பரிசில்களைத் தட்டிக் கொண்டனர். போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை த.ஈ.க கழகப் பொறுப்பாளர் திரு.இளங்குமரன் அவர்கள்,கல்விமேம்பாட்டுக் கழகத் தலைவர் வணபிதா மைக்கல் ஜோசேப்

## வெற்றிவீரர் அட்டவணை

| வயது பிரிவு | பெயர் | புள்ளிகள் |
|---|---|---|
| 3 - 5 | சுபன் | 13 |
| 6 - 7 | சதீஸ் | 18 |
| 8 - 9 | சண்முகமூர்த்தி | 13 |
| 10 - 11 | சமந்தகுமார் | 16 |
| 12 - 13 | டேவிட்மைக்கல் | 13 |
| 14 - 15 | சிறீவரதன் | 30 |

சகலதுறை விளையாட்டு சாதனை வீரன்
ப. சிறீவரதன்

சங்கிலியன் இல்லமும், அஞ்சலோட்ட விருதினைப் பண்டாரவன்னியன் இல்லமும், கடினமான தடை ஓட்ட நிகழ்ச்சிகளில் முதலிடம்பெற்ற பண்டாரவன்னியன் இல்லத்தைச் சார்ந்த நந்தகுமாரும், ஆமை மாற்றுடை தரித்து முதலிடத்தைத் தட்டிக் கொண்ட சுபனும், யிறிழுத்தல் பலப்பரீட்சையில் சங்கிலியன் இல்லமும்; சட்ட வேலித் தடை தாண்டல் நிகழ்ச்சியில் எல்லாளன் இல்லமாணவன் ஸ்ரீவரதனும் விருதுகளைசுவீகரித்துக்கொண்டனர்

காந்தரூபன் அறிவுச் சோலை விளையாட்டுப் போட்டியில் விருந்தினராக கலந்து சிறப்பித்த செஞ்சோலை மகளிர் வித்தியாலய மாணவிகள் நீலக் கோல உடையுடன் சிறப்பு நிகழ்ச்சியாக ஏற்பாடு செய்யப்பட்ட

அடிகளார் அவர்கள் யாழ்பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் அ சண்முகதாஸ் அவர்கள், திரு. இரா.சிவானந்தன் பிரதிக் கல்விப்பணிப்பாளர் அவர்கள் வலயம் இரண்டு) வழங்கிச் சிறப்பித்தனர்.

அதிக புள்ளிகளைப்பெற்று இவ்வருட முதன்மை இல்லமாகமிளிர்ந்த எல்லாளன் இல்லத்துக்கான வெற்றிக் கேடயத்தைமிகுந்த ஆரவாரத்தின் மத்தியில், முதன்மை விருந்தினர் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் அவர்கள் வழங்கிமேன்மைப்படுத்தினர்

விளையாட்டரங்கில் பட்டொளிவீசிப் பறந்துகொண்டிருந்த தேசியக்கொடி, பாடசாலைக்கொடி, இல்லக் கொடிகள் என்பன சம்பிரதாயபூர்வமாக இறக்கப்பட்

க்கு வருகை தந்த யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி அவர்கட்கு நான்கு வரிசைகளில் ஆரம்பக் கோட்டில் நிரைப்பட்டு நின்ற வீரர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர் போட்டியை மகிழ்ச்சியுடன் ஆரம்பித்து வைப்பதாக கூறிக் கொடியை அசைத்ததும் வீரர்கள் 'நான் முந்தி நீ முந்தி' என்று ஓட ஆரம்பித்தனர். ஒலிபெருக்கி வாகன

யேயும் ஆசிரியர்களிடையேயும் மிகுந்த போட்டியுணர்வை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

போட்டிகள் அனைத்தும் வயதுக்கேற்ற வகையில் புதுமை சேர்த்து வழங்கப்பட்டன. 3 வயதுமுதல் 15 வயதுவரை காந்தருபன் அறிவுச் சோலையில் படிக்கும் பிள்ளைகள் ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, பிரிவுக்கேற்ற நிகழ்ச்சிகளான படம் பொருத்துதல் முதல்

முகப்பிலிருந்து தொடங்கிய அணிவகுப்பை ஆரம்பித்து வைத்துப் பின்னர் விளையாட்டரங்கில் அணிவகுப்பு மரியாதையையும் ஏற்றுக் கொண்டனர். மிக விறுவிறுப்பாக ஆரம்பித்த அலங்கார அணிவகுப்புக்கு ஏற்ற தாளலய முயற்சியாக பாண்ட் வாத்திய அணிவகுப்பு இருந்தது அறிவுச்சோலை மாணவர்கள் வழங்கிய பாண்ட் வாத்திய இசையும் அணிவகுப்பு நிகழ்ச்சியும்

தமிழீழப் பெரியார்களின் கரங்களிலிருந்து பெற்றுக் கொண்டனர்.

பார்வையாளர் பந்தல் நிறைந்திருந்தது: பல்வேறு அமைப்பைச் சார்ந்தவர்கள் குழுமியிருந்தனர்: செஞ்சோலைப்பிள்ளைகள் நீலக்கோலவுடையுடன் காணப்பட்டனர் சாரணச்சிறுவர்களும்: முதலுதவிப்படையினரும் தத்தமது கடமைகளை நிறைவேற்றி நின்றனர் எல்லோருடைய கவனமும் இடைவேளை நிக

அலங்காரத்தில் வெளிப்படுத்தியமை வெள்ளிடைமலை இடைவேளையின் பின் நிகழ்ந்த மாணவர் அஞ்சலோட்டங்களையடுத்து, ஆசிரியர்களது நிகழ்ச்சிகளுடன் போட்டி நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றனபோட்டிகளின் முடி

சோலை மகளிர் வித்தியாலய மாணவிகள் நீலக்கோல உடையுடன் சிறப்பு நிகழ்ச்சியாக ஏற்பாடு செய்யப்பட்ட 'இசைக்கதிரை' நிகழ்ச்சியில் பங்கு கொண்டனர் முறையே கீதா, மலையரசி, தூயவள் ஆகியோர் முதலாம், இரண்

டிருந்த தேசியக்கொடி, பாடசாலைக்கொடி, இல்லக் கொடிகள் என்பன சம்பிரதாயபூர்வமாக இறக்கப்பட்டதும் காந்தருபன் அறிவுச்சோலை இவ்வருட விளையாட்டு விழா நிறைவுபெற்றது.

# யாழ். மாவட்டத்தில் உதைபந்தாட்டம் பிரச்சினைகளும் - ஆலோசனைகளும்

வலிகாமம் கிழக்கு (யாழ்ப்பாணம்) உதைபந்தாட்டச்சங்கம் தற்போது யாழ்ப்பாணம் மாவட்ட உதைபந்தாட்டச் சபை போட்டியில் (முன்னர் விளையாட்டு அபிவிருத்திக் குழுப் போட்டி) கலந்து கொள்ளும் மூன்று கழகங்களைத் தெரிவு செய்வதற்காக விலக்கல் முறைப்போட்டியை நடாத்தி வருகின்றது. [வலி. கிழக்கு உதைப்பந்தாட்டச் சங்கத்தில் உள்ள கழகங்கள் A, B, C என மூன்று பிரிவுகளாகப்பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றிலும் மூன்று கழகங்கள் தெரிவு செய்யப்படும். முன்னர் கழகங்கள் அவற்றின் விளையாட்டுத்திறமையின் அடிப்படையிலேயே A B,C எனப்பிரிக்கப்பட்டன. இவ்வருடம் 11 வீரர்களும் காலணி அணியும் கழகங்கள் A பிரிவிலும் ஆகக் குறைந்தது 7 பேர் காலணி அணிய வேண்டியவை B பிரிவிலும் காலணிக்கட்டுப்பாடு இல்லாத கழகங்கள் C பிரிவிலும் உள்ளன. A, B, C, பிரிவுகளில் சாம்பியனாக வரும் கழகத்துக்குப் பரிசில் வழங்கப்படுகின்ற அதேவேளை A B, C ஒவ்வொன்றிலும் தலா மூன்று கழகங்கள் தெரிவு செய்யப்பட்டு இந்த ஒன்பது கழகங்களிடையேயும் மீண்டும் விலக்கல் போட்டி நடாத்தபடும். இதன் மூலம் வலி. கிழக்கில் மூன்று தலை சிறந்த கழகங்கள் தெரிவு செய்யப்படும். இவை வலி. மேற்கு, வடமராட்சி, தென்மராட்சி உதைபந்தாட்டச் சங்கங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மும்மூன்று கழகங்களுடன் மொத்தம் 12 கழங்களாகப் போட்டியில் (மாவட்டப்போட்டி) கலந்து கொள்ளும். இதற்கு முன்னர் இரண்டு வருடங்கள் இப்போட்டிகள் யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவால் நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு அபிவிருத்திக் குழுவின் தோற்றம்

யாழ் மாவட்டத்தில் உதைபந்தாட்டமானது பல தசாப்தங்களாக ஆடப்பட்டு வருகின்றது பல விளையாட்டுக்கள் விளையாடப்பட்டாலும் மிகக் கூடுதலானோர் விளையாடுகின்ற மிகக் கூடுதலானோர் இரசிக்கின்ற விளையாட்டாக இது திகழ்கின்றது. கடந்த காலங்களில் யாழ்ப்பாண உதைபந்தாட்ட வீரர்கள் இலங்கை ரீதியில் பங்கு கொண்டு சிறப்பாக விளையாடி யாழ்ப்பாணத்திற்குப் பெருமையைத் தேடித்தந்துள்ளார்கள். ஆனால் யுத்த நிலைமை காரணமாக இன்றைய வீரர்கள் தமது திறமைகளை அவ்வாறு காண்பிக்கச் சந்தர்ப்பம் இல்லாதவர்களாகவும், பிறநாட்டு உதைபந்தாட்ட அணிகளின் விளையாட்டுகளைக் கண்டு களிக்கவும் அவற்றின் மூலம் புதிய நுணுக்கங்களைக்கற்றுக் கொள்ள முடியாதவர்களாகவும் உள்ளனர். அண்மையில் நடைபெற்று முடிந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளைக்கூட ஒருசிலரே கண்டுகளிக்கக்கூடியவாய்ப்புக் கிடைத்தது. இன்றைய நிலையில் யாழ் உதைபந்தாட்டத்தின் தரத்தை உயர்த்தச்சில முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியவர்களாக நாம் உள்ளோம். நமது முயற்சியால் நம் வீரர்களின் விளையாட்டுத்தரம் உடனடியாகச் சர்வதேச வீரர்களின் தரத்திற்கு உயர முடியாவிட்டாலும் இனி வருங்கால வீரர்களின் உயர்வுக்குப்படிகற்களாக அமையும் என எதிர்பார்க்கலாம்.

இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம உதைபந்தாட்டச் சங்கத்தில் 15 க்கும் குறைவான கழகங்களே அங்கம் வகித்து வந்தன அப்போதைய உதைபந்தாட்டப் போட்டிகள் பெரும்பாலும் சீராகவே நடைபெற்று வந்தன. ஆனாலும் சங்கத்தில் அங்கம் வகிக்காத கழகங்களும் ஆங்காங்கே தமக்குள் உதைபந்தாட்டப் போட்டிகளை நடாத்தி வந்தன. அன்றைய போட்டிகளின் போது சில அசம்பாவிதங்கள் நடைபெற்றிருந்தாலும் கடந்த 5 வருடங்களுக்குள் உதைபந்தாட்டப் போட்டிகளில் குழப்பம் ஏற்படுவது மிகவும் அதிகரித்துக் காணப்பட்டது அதனால் கழகங்கள் எல்லாவற்றையும் சங்கங்களில் பதிவு செய்து அவற்றை ஒழுங்குமுறைக்குக் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதன்படி மூன்று வருடங்களுக்கு முன்னர் விளை

(4ஆம் பக்கம் பார்க்க)

# தோல்வியில் கற்ற இங்கிலாந்தும் கற்க மறுக்கும் சிறிலங்காவும்

கிரிக்கெட் பொறுத்து தற்போது இரண்டு டெஸ்ட் ஆட்டத்தொடர்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒன்று இங்கிலாந்தில் நடைபெறும் தென் ஆபிரிக்க இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 3 டெஸ்ட் ஆட்டத்தொடர். அடுத்தது பாகிஸ்தான் சிறிலங்கா அணிகளுக்கு இடையிலான இலங்கையில் நடைபெறும் மூன்று டெஸ்ட் ஆட்டத் தொடர் தெ ஆபிரிக்க இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் இரண்டு ஆட்டங்கள் நிறைவுபெற்றுள்ளன. பாகிஸ்தான் இலங்கை டெஸ்ட் தொடரில் ஒரு ஆட்டம் மட்டும் நிறைவுபெற்றுள்ளது

தெ. ஆபிரிக்க இங்கிலாந்துக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் படுமோசமான தோல்வியொன்றை இங்கிலாந்து தழுவிய போது அடுத்தடுத்து இவ்வீழ்ச்சியில் இருந்து எவ்வாறு மீளப்போகிறார்கள் என்றொருவினா எழுந்தது. இதே வேளை பலமிக்க பாகிஸ்தான் அணியுடன் இலங்கை முதலாவது டெஸ்ட் போட்டியை எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறது என்ற வினாவும் சேர்ந்தே எழுந்தது. இங்கிலாந்து தனது முதல் டெஸ்ட் ஆட்டத்துக்கு முற்றும் மாறாக மிகத் திறமையாக இரண்டாம் டெஸ்டில் விளையாடியிருந்தார்கள், ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தாலும் கூட அதில் விஞ்சியதொரு நிலையில் காணப்பட்டார்கள் ஆனால் இங்கு இலங்கை மோசமான தோல்வியொன்றினைச் சந்தித்தது.

லீட்சில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்டில் முதல் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஒன்பது இலக்கு இழப்பிற்கு 477 ஓட்டங்களைப பெற்றுக் கொண்டது. இதில் அணித் தலைவர் அத்தர்டன் 99 ஓட்டங்களும் கிரகம் தோர்ப், றோடஸ் ஆகியோர் 72, 65 என்றவாறு ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர் இவ்வோட்ட எண்ணிக்கை இங்கிலாந்தை மிகப் பாதுகாப்பான நிலைக்கு கொண்டு சென்றது. இங்கிலாந்துக்கு தோல்வி ஏற்படாது என்ற நிலைக்குக் கொண்டு சென்றது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தெ. ஆபிரிக்கா சகல இலக்குகளையும் இழந்து 447 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. றிச்சர்ட்சன் 48, பீட்டர் கிர்ஸ்டன் 104, ஜொன்றி றோட்ஸ் 46 பின்வரிசை ஆட்டக்காரர்கள் மக்மிலன், மதியூஸ் ஆகியோர் முறையே 78, 62 என்றவாறு ஓட்டங்களைச் சேகரித்துக் கொண்டனர். டிபிரெய்டாஸ் 4/89 என்றவகையில் இலக்குகளைப் பெற்றுக் கொண்டார். இங்கிலாந்து தம் இரண்டாவது இனிங்சில் 5 இலக்கு இழப்பிற்கு 267 என்ற நிலையில் தம் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது இதில் கிரவம் ஹிக் 110 ஓட்டங்கள் பெற்றது சிறப்பானது. மீண்டும் தோர்ப் 73 ஓட்டங்கள் பெற்றுக் கொண்டார் எனவே தெ. ஆபிரிக்கா 4 மணித்தியாலங்களில் 298 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இறுதி நாளின் பிற்பகுதி அமைந்தது. முடிவில் தெ. ஆபிரிக்கா 3/116 என்ற நிலையில் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. ஜி. கிர்ஸ்டன் 65 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

இவ்வாட்டம் ஓரளவிற்கு புள்ளிவிபரத் தேவைகளுக்கு முக்கியத்துவம் பெற்றாலும் கூட இங்கிலாந்தைப் பொறுத்தவரை அவர்களது தன்னம்பிக்கையைப் பெரிதும் வளர்த்துவிட்ட ஆட்டமாகக் காணப்படுகின்றது. அத்தர்டன் முறைகேடாக பந்தைக் கையாண்டார் என்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள வேளையிலும் தன் அணியை நிலைகுலையாது நின்று சிறப்புற வழி நடாத்தியுள்ளார் அணியின்ஒவ்வொரு வீரரும் தம் அணி இலகுவானதல்ல என்பதைத் தெ. ஆபிரிக்காவிற்கு உணர்த்தியுள்ளார்கள் டெஸ்ட் ஆட்டங்கள் மிகக் கடினமானவை

(4ஆம் பக்கம் பார்க்க)

# யாழ் மாவட்டத்தில்

யாட்டு அபிவிருத்திக்குழு உருவாக்கப்பட்டது. இக்குழுவானது எல்லா விளையாட்டுக்களையும் அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது உதைபந்தாட்டம் விளையாடும் எல்லாக் கழகங்களையும் பதிவு செய்ய முயற்சி எடுத்து வலி. கிழக்கு, வலி. மேற்கு, வடமராட்சி, தென்மராட்சி - தீவகம் என நான்கு உதைபந்தாட்டச் சங்கங்களை உருவாக்கியது. கழகங்கள் பதிவு செய்யப்பட்டுக் குற்ற மிழைக்கும் கழகங்கள் மீதும், கழக நிர்வாகிகள் மீதும் விளையாட்டு வீரர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் போட்டிகளின் போது வன்முறைகள் ஓரளவு குறைக்கப்பட்டுள்ளன. இப்படியான வன்முறைகளில் குறிப்பாக ஒரு சில வீரர்களே சம்பந்தப்பட்டவர்களாகக் காணப்படுகின்றார்கள் மீண்டும் மீண்டும் இவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும் வருகின்றன. இதில் இருந்து இவர்களுக்கு வழங்கப்படுகின்ற தண்டனை போதியதாக இல்லை என்ற முடிவுக்கு வரலாம் இப்படியான வீரர்களால் அவர்களது கழகங்களுக்கும் சிலவேளைகளில் தண்டனை வழங்கப்படுகின்றது. இதனால் அக்கழகங்களின் நன்மதிப்புப் பாதிப்படைகின்றது. கழகங்கள் முதலில் இவர்களைத் தமது அணியில் இருந்து வெளியேற்றத்துணிய வேண்டும்.

## வீரர்களின் மனப்பாங்கு

தம்மைச் சுய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கக் கூடிய வீரர்கள் திறமை மிக்கவர்களாகத் திகழ்வார்கள் என்பதில் சந்தேகமில்லை மைதானத்துள் விளையாட்டுப் பண்புகளை மதிக்காத வீரர்களையும் ஒரு கழகத்திற்கு மட்டுமல்லாது வேறு கழகங்களுக்கு விளையாடிய வீரர்களையும் வேறு பெயரில் ஆள்மாறாட்டம் செய்து விளையாடுகின்ற வீரர்களையும் நாம் காணக் கூடியதாக இருந்தது இதனால் வேறு ஒரு வீரர் விளையாடும் சந்தர்ப்பம் தவிர்க்கப்படுகின்றது. இவை ஓரளவிற்கு நிறுத்தப்பட்டுள்ளன இத்தவறுகளுக்குவிளையாட்டு வீரர்கள் மட்டுமல்ல கழக நிர்வாகிகளுமே பொறுப்பானவர்களாவர். ஒரு வீரர் தனது சொந்த விருப்பத்தின் பேரில் ஒருகழகத்திலும் தான் தொழில் புரிகின்ற அல்லது கல்வி கற்கின்ற நிறுவனத்தின் கழகத்திலும் ஒரே நேரத்தில் உறுப்பினராக இருக்க முடியும். ஆனால் குறித்த ஒரு போட்டியில் விளையாட ஏதாவது

பாக அண்மையில் வெளியிடப்பட்ட உதைபந்தாட்டப் பிரச்சினைகள் பற்றிய நூலை வாசிப்பதால் அனைவரும் பயனடைய முடியும்) இதன் மூலம் பார்வையாளர்களும் பயனடைய வாய்ப்பு ஏற்படும் விளையாட்டு விறுவிறுப்பானதாகவும் இரசிப்பானதாகவும் இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு வருடா வருடம் விதிகளில் சில மாற்றங்கள் கொண்டு வரப்படுகின்றன அத்துடன் உதைபந்தாட்டப் போட்டிகளின் போது மத்தியஸ்தரின் குறுக்கீடு மிகக் குறைந்ததாகவே இருக்க வேண்டும். இவை நடைபெற்று முடிந்தஉலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டிகளைப் பார்வையிட்டவர்கள் நன்கு அவதானித்திருப்பார்கள் உதாரணமாகப் பந்தைக் கையால் மறிக்க எத்தனித்த போது பந்து கையில் பட்டு எதிர் அணி வீரரிடம் போகின்ற போது மத்தியஸ்தர் போட்டியைத் தொடர்ந்து விளையாட அனுமதிப்பார். ஆனால் பந்து கையில் பட்ட காரணத்துக்காக உடனேயே வீரர்கள் மத்தியஸ்தரை நோக்கிச் சத்தமிடுவார்கள். பார்வையாளர்களும்கூடக்கூச்சலிட ஆரம்பித்து விடுவார்கள் விளையாட்டின் சாதக நிலைக்கு ஏற்ப மத்தியஸ்தர் இயலுமானவரை மிகக் குறைந்த அளவிலேயே போட்டியை இடை நிறுத்த முயற்சி செய்யவேண்டும் இதை உணராத வீரர்கள் ஒரு சிலர் மத்தியஸ்தருடன் வாக்குவாதத்தில் இறங்க முயற்சிக்கின்றார்கள்.

## சில பிரச்சினைகள்

சங்கங்கள் வருடா வருடம் தமது அங்கத்துவ கழகங்களைத் தரம்பிரித்து அவற்றிற்குச் சுற்றுப்போட்டிகளையும், எல்லா கழகங்களும் கலந்து கொள்ளும் ஒரு விலக்கல் முறைப் போட்டியையும் நடாத்த வேண்டியது கட்டாயமாகும் இதன் மூலம் சிறிய கழகங்கள் போட்டிகளில் கலந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். அத்துடன் புதிய கழகங்கள் அல்லது சங்கத்தில் இதுவரை இணைக்கப்படாத கழகங்கள் சங்கத்தில் இணைவதில் ஆர்வம் காட்டும். ஆனால் இப்படியான போட்டிகளை நடாத்துவதில் மைதான வசதி, தனிப்பட்ட கழகங்களால் நடாத்தப்படுகின்ற போட்டிகள் என்பவற்றால் தடங்கல்கள் உண்டாகின்றன. தனிப்பட்ட கழகங்கள் போட்டிகளை நடாத்தும் போது பெரும்பாலும் தெரிவு செய்யப்பட்ட சில கழகங்களுக்கே போட்டிகளை நடாத்துகின்றன. இதனால் ஏனைய

மில்லாதபடியாலேயே 7பேர் கொண்ட போட்டிகளை நடாத்தச் சிலர் முயற்சிக்கின்றார்கள். 7பேர் கொண்ட போட்டிகளை நடாத்துவதால்மேலும்மேலும்பல சிக்கல்களே உண்டாகும். சரியான விஸ்தீரணமுள்ளமைதானம கூட புல் இல்லாத சடுமையான நிலமாகவும் அல்லது மேடுபள்ளங்கள் உள்ளதாகவும் காணப்படுகின்றன. சர்வதேசப் போட்டிகளைப்பார்க்கும் போது அவர்களது விளையாட்டுத்திறமைக்கு மைதானமும் ஒருகாரணம் என்று கூறலாம். பந்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதும் பந்தை மற்றவர்களுக்குச் செலுத்துவதும், குறித்த இடத்திற்கு அடிப்பதும் அந்த மைதானங்களில் இலகுவானதாகும். ஆனால் நமது மைதானங்களில் வீரர்கள் தாம் நினைக்கின்றபடி விளையாட முடியாதுள்ளனர். கால் தடுக்கிக் கீழே விழுந்தால் கூடப் பெரிய காயம் உண்டாகிவிடும் என்றபயத்துடனேயே விளையாடவேண்டியுள்ளது. மைதானங்கள் சீரமைக்கப்பட வேண்டியதுடன் விளையாட்டும் உடற்பயிற்சியும் மனிதனுடைய சுகவாழ்விற்கு முக்கியமான அம்சங்கள் என்பதைக் கருத்தில் எடுத்து ஒவ்வொரு உள்ளூராட்சிச்சபையும் தனித்தனி மைதானங்களைக் கொண்டிருத்தல் அவசியமாகும். இதன்மூலம் பல இடங்களில் போட்டிகளை நடாத்த வாய்ப்பு ஏற்படுவதுடன் குறுகிய காலத்தில் போட்டிகளை நடாத்தி முடிக்கவும் இயலும் அல்லாமலும் அந்தந்தப் பிரதேசங்களில் உள்ள உதைபந்தாட்டத்தின் தரத்தையும் முன்னேற்றமுடியும், உதைபந்தாட்டப்போட்டிகளுக்கு அல்லது பயிற்சிகளுக்கு நீண்டதூரம் செல்ல வேண்டிய தேவை இராதபடியால் நேர விரயத்தையும் குறைக்க முடியும்

வீரர்களைப் பொறுத்தவரையில் கடும்பயிற்சி எடுத்தலின் மூலமே தமது தரத்தை உயர்த்திக் கொள்ள முடியும் அநேகமான வீரர்கள் பந்தை மறித்தல், பந்தைச் செலுத்துதல், தன்வயப்படுத்தல் போன்ற பல்வேறு அடிப்படைத் திறன்கள் அற்றவர்களாகக் காணப்படுகின்றார்கள் இவ் அடிப்படைத் திறன்கள் இன்றிப் போட்டிகளிலும் திறமையாக விளையாட முடியாது. இப்படியான வீரர்கள்தான் எதிரணி வீரர்களை இடிப்பதிலும் தள்ளுவதிலும் எதிரணி வீரர்களின் கால்களுக்கு அடிப்பதிலும் ஈடுபடுகின்றார்கள் ஆகையால் வீரர்களது அடிப்படைத்திறன்களை வளர்ப்பதில் பயிற்சியாளர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

தவறுகளைச் சாட்டாகக் கொண்டு தோல்வியடையும் கழகம் போட்டியைக்குழப்ப முயற்சிப்பது வேதனைக்குரியது உலககிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் கூட மத்தியஸ்தர்களின் தீர்ப்புக்கள் சம்ந்தமாகப் பலவித மான விமர்சனங்கள் கூறப்படுகின்றன ஆனால் மத்தியஸ்தர் விட்ட தவறுக்காகப் போட்டியின் முடிவை மாற்றியமைக்க முடியாது மத்தியஸ்தரானவர் தனது நிலைப்பாட்டில் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு சம்பவங்களுக்கான தீர்ப்பை உடனடியாக வழங்கவேண்டிய நிலையில் உள்ளார் பார்வையாளர்கள் மைதானத்தைச் சுற்றி நிற்பதால் பார்வையாளர் கண்டு கொள்ளக் கூடிய ஒரு சம்பவத்தை மத்தியஸ்தர் கண்டு கொள்ளமுடியாமற் போகலாம் மத்தியஸ்தர் விடும் தவறுக்காக ஒரு கழகம் தோல்வியடைவதா? என்று வினாவலாம் தவறு செய்யும் மத்தியஸ்தர் மீது நடவடிக்கை எடுத்தால் என்ன? என்று கூடக்கேட்கலாம் இன்றைய நிலையில் ஒரு சில மத்தியஸ்தர்களே போட்டிகளில் கடமையாற்ற முன்வருகிறார்கள் போதிய மத்தியஸ்தர்கள் இல்லாத நிலையில் மத்தியஸ்தர்கள் மீது நடவடிக்கை எடுப்பது நடைமுறைக்குச் சாத்தியமாகாது ஆனாலும் மத்தியஸ்தர்களுக்கு அடிக்கடி புத்தூக்க வகுப்புக்களை நடாத்திப் போட்டிகளில் ஏற்பட்ட தவறுகளுக்குச் சரியான முறைகளைக் காட்டுவதன் மூலம் அவர்களது தரத்தை உயர்ந்த முயற்சிக்கவேண்டும். அத்துடன் கழகங்கள் தமது வீரர்களை மத்தியஸ்தர்களாக்குவதில் முயற்சி எடுக்கவேண்டும் புதிதாக மத்தியஸ்தர்கள் சேர்ந்து கொண்டாலொழிய இப்படியான நிலைமையைச் சீராக்குவது கஷ்டமாக இருக்கும். புதிதாக மத்தியஸ்தர்கள் சேர்வதற்குப் போட்டிகளில் வன்செயல்கள் இல்லாதொழியவேண்டும்.

## ஒத்துழைப்பு தேவை

பொதுசன தொடர்பு சாதனங்களும் உதைபந்தாட்டத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவ முடியும். பத்திரிகைகள் தினமும் நடைபெற இருக்கின்ற போட்டிகளைப்பற்றி ஓரளவிற்கு அறிவித்தல் கொடுத்து வந்தாலும் போட்டிமுடிவுகளைப்பற்றி அறியத்தராதது ஒரு பெரும் குறையாகவே உள்ளது போட்டி முடிவுகள் சம்பந்தமான முடிவுகளை வெளியிட்டுச் சிறந்த வீரர்களை உற்சாகப்படுத்த முன்வரவேண்டும். இதனால் வீரர்களின் ஆர்வம் பெருகி விளையாட்டின் தரம் உயரும்.

ஆகையால் யாழ் உதைபந்தாட்டதின் தரத்தைஉயர்த்துவதற்கு விளையாட்டுவீரர்கள் மட்டுமல்லாது பயிற்சியாளர்கள், நிர்வாகிகள் பார்வையாளர்கள் காவல்துறையினர், உள்ளூராட்சிச்சபையினர் பத்திரிகையாளர்கள் ஆகிய எல்லோரினதும் ஒத்துழைப்பு அவசியமாகும்.

**S. அன்ரனிப்பிள்ளை கிளிபேட்**
தலைவர் யா. உ ச
வலிகிழக்கு உ ச

# தோல்வியில்

ஒரு தொடர்பு நிகழ்ச்சி டெஸ்ட் ஆட்டங்களுக்கு நாங்கள் தகுதியானவர்களேஎன்று இங்கிலாந்து நிரூபித்துள்ளது.

இன்னொரு புறம் சிறிலங்கா தனது முதலாவது டெஸ்டில் பாகிஸ்தானிடம் படுதோல்வியடைந்துள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் சகல இலக்குகளையும் இழந்து 390 ஓட்டங்கள் பெற்றுக் கொண்டது. அவர்கள் சுழற் பந்து வீச்சாளருக்குச் சாதகம் எனக் கருதப்பட்ட களத்தில் டெஸ்ட் வீரருக்குரிய பாணியில் ஓட்டங்களைச் சேகரித்துள்ளமையை அவதானிக்க முடிகிறது. சயீட் அன்வர் 94, ஆமிர் சொஹெய்ல், ஆசிப் முஜ்டாபாக்பசீட் அலி, வாசிம் ஆக்ரம் நாற்பதுகள் இன்சமாம் உல் ஹக்81 என்றவாறு தொடராக ஒட்டங்களைச் சேகரித்துள்ளார்கள் ஒரு நாள் ஆட்டத்தின் அதிரடி வீரர்களான இவர்கள் மிக மெதுவாக ஒரு இலக்கினை நோக்கிச் சென்றுள்ள பாங்கும் கூட ஆட்டத்தைவெற்றி தோல்வியற்ற ஒரு நிலைக்குக் கொண்டு செல்ல முடியாததான என்றொரு வினா எழுப்புகின்றது. ஆனால் எதிர்பார்ப்புகளுக்குமாறாக மீண்டும் சிறிலங்கா அணிசரிந்தது: 181 ஓட்டங்களுக்குத் தம் சகல இலக்குகளையும் இழந்து 301 ஓட்டங்களால் பாகிஸ்தானுக்கு வெற்றியைக் கொடுத்தது.

இத்தோல்வியில் உள்ள துரதிஷ்டம் என்னவெனில் நான்காவது நாளிலேயே ஆட்டம் முடிவுற்றதாகும். இவ்வருட ஆரம்பத்தில் இந்தியாவுடன் விளையாடிய 3 டெஸ்ட் போட்டிகளிலும் நான்காவது நாளிலேயே தோல்விகண்டவர்கள் இங்கும் அதேபாணியில் தோல்வி கண்டிருக்கிறார்கள் இத்தோல்வியின் பின்னர் விமர்சகர்கள் சிறிலங்கா அணி மீது பல குற்றச்சாட்டுகளைச் சுமத்துகிறார்கள் ஒரு நாள் ஆட்டத்தில் சாபிக்கும் சனத்ஜயசூரிய டெஸ்ட் போட்டிகளில் சோபிப்பதில்லை இங்கும் அதுவே

# 45 வது நாள் நினைவஞ்சலி

28 - 08 - 94



திருமதி

**செல்வராணி சந்திரபாலா (ரஞ்சி)**

(36/4 இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்)

பிறப்பு: 31 - 05 - 1963 பிரிவு: 15 - 07 - 1994

அமைதியே உருவான எங்கள் பாசதீபமே
அம்மா, உன்னுடன் ஒன்றாகப் பேசி
உறவாடி மகிழ்ந்த நட்களை எண்ணித்
துடிக்கிறோம்
அன்புடையாள் நீ வருவாய் என்று அத்தான்
வழி மீது விழிவைத்துக் காத்திருக்க,
எங்கள் அன்பு மகளே பெற்றவயிறு துடிக்குதம்மா
நீ தாயாக மாறி தாலாட்டுப் பாடுவாய்
என்றிருந்தோம்
ஆறாத் துயரில் எங்களை ஆழ்த்திவிட்டு
மீளாத் துயில் கொண்ட காரணம் என்ன?

அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி அடைய எங்கள் கண்ணீர்ப் பூக்களை சமர்ப்பிக்கிறோம்.

பிரிவால் வாடும்:-
அன்புக்கணவர் சுப்பிரமணியம்
சந்திரபாலா (பிரான்ஸ்)
அன்பும் பாசமுமுள்ள அப்பா, அம்மா,
அத்தை திருமதி சுப்பிரமணியம்,
பாசமுள்ள சகோதரர்கள்
சகோதரிகள், மைத்துனி
மற்றும் உறவினர்கள்.

சி. இராசதுரை,
36/4 இராமநாதன் வீதி,
கலட்டி,
யாழ்ப்பாணம்.

(9211)

# 45-ம் நாள் நினைவலைகள்



மலர்வு:
28
|
05
|
1973

டியில் விளையாட ஏதாவது ஒரு கழகத்தினூடாகவே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் ஒரு வீரன் தன்னைப் பல நூற்றுக்கணக்கான இரசிகர்கள் அவதானி இந்த வண்ணம் உள்ளனர் என்பதை உணர வேண்டும். மைதானத்தில் பொறுமையிழந்து வன்செயல்களில் இறங்கினால் இரசிகர்கள் தன்னை எவ்வாறு கணிப்பார்கள் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். உலக உதைபந்தாட்டச் சம்மேளனம் ''நேர்மையான விளையாட்டு'' என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. இதனால் தான் போட்டிகள் முடிவடைந்த பின்னர் கூட அப்போட்டிகள்சம்பந்தமான வீடியோ படங்களைப் பார்வையிட்டு மத்தியஸ்தரின் கண்ணில் படாமல் முரட்டுத்தனமாக விளையாடிய வீரர்களை இனம் கண்டு அது சம்பந்தமாக ஆராய்ந்து அவ்வீரர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இன் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்ட வீரருக்குப் பண அபராதம் அல்லது குறிக்கப்பட்ட எண்ணிக்கையான சர்வதேச போட்டிகளில் விளையாட தடை அல்லது இரண்டு வகையான தண்டனையும் வழங்கப்படுகின்றது. இந்த விடயங்களை வீரர்கள் தமது கவனத்தில் எடுக்கவேண்டும் மத்தியஸ்தர்களுடன் வாக்குவாதப்படல், எதிர் தரப்பு வீரருடன் வாக்குவாதப்படல் என்பன தவிர்க்கப்படல் வேண்டும். உதைபந்தாட்ட விதிகள் சம்பந்தமாக விளையாட்டு வீரர்களுக்குப் போதிய அறிவின்மையும் இதற்கு ஒரு காரணமாகும். கழகங்கள் மத்தியஸ்தர் சங்கங்களை அணுகி விளையாட்டு வீரர்களுக்கு விதிகள் சம்பந்தமான அறிவூட்ட முயற்சி எடுக்க வேண்டும். (இது தொடர்

துகின்றன. இதனால் ஏனைய கழகங்கள் போட்டிகளில் கலந்து கொள்ளவாய்ப்பு இல்லாது விடுகின்றது. உதாரணமாக இந்த ஆண்டு நடாத்தப்பட்ட சுருட்டுத்தொழிலாளர் சங்கப்போட்டி இராசிசில்க் ஆதரவு மின்னொளிப் போட்டி, அமரர் சிவகுரு நினைவுப்போட்டி, திருமலை நட்சத்திரப்போட்டி றோட்டறக்ற் கழகம், மிட் ரவுண் றோட்டறக்ற் கழகப் போட்டிகள், ஞானமுருகன் கழகப் போட்டி என்பவற்றைகுறிப்பிடலாம். அத்துடன் இவை தமக்குக் கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் போட்டிகளை நடாத்தி முடிக்காது கழகங்களின் வசதிப்படி போட்டிகளை நடாத்துவதால் போட்டிகள் முடிவடைவதில் காலதாமதம் ஏற்படுகின்றது இப்படியான போட்டிகள் குறித்த நேரத்திற்கு ஆரம்பமாவதில்லை என்பதையும் அவதானிக்க கூடியதாக உள்ளது குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னரே அணிகள் மைதானத்தில் நுழைவதற்கு முயற்சிக்க வேண்டும் முன்னேற்றம் என்பது விளையாட்டுத்தரத்தில் மட்டடுமல்ல நேரத்தைக் கடைப்பிடிப்பதிலும் இருக்க வேண்டும்.

மைதானக்குறைபாடுபற்றிக்கூறும் போது யாழ்ப்பாணத்தில் போதிய எண்ணிக்கையான மைதானங்கள் இல்லாதபடியால் ஒரே நாளில் இரண்டு அல்லது மூன்று இடங்களில் போட்டிகளை நடாத்த முடியாமல் உள்ளது கழகப் போட்டிகளில் குழப்பங்கள் ஏற்படுகின்ற காரணத்தால் பாடசாலை அதிபர்கள் மைதானங்களை தந்துதவப் பின்னிற்கின்றார்கள், பாடசாலை மைதானங்களை விட ஒருசில மைதானங்களே போட்டிகளைநடாத்தக்கூடிய விஸ்தீரணமுள்ளமைதானங்களாக உள்ளன. போதிய விஸ்தீரண

கவனம் செலுத்த வேண்டும்.

கழகங்களைப் பொறுத்த வரையில் குறிப்பாகப் புதிதாக இணைந்து கொண்ட கழகங்கள் சில ஒழுங்கான மேலங்கி இன்றியும் ஒவ்வொரு வீரனும் ஒவ்வொரு விதமான ஒவ்வொரு நிற மான மேலங்கியுடனும் மைதானத்துள் காட்சிஅளிப்பதும் காலணி அணிந்த வீரர்கள் ஒவ்வொரு நிறக்காலுறைகளுடன் காட்சியளிப்பதும் போட்டிகளைக் கேலிக்குரியதாக்குகின்றன இப்படியான கழகங்களைக் கண்டதுமே பார்வையாளர்கள் உற்சாகமிழந்து விடுகின்றார்கள் மத்தியஸ்தருக்கும் உதவியாளர்களுக்கும் இக்கழகங்கள் சிக்கல்களை உண்டாக்குகின்றன கழகங்கள் ஒழுங்கான முறையில் மைதானத்துள் நுழைந்தால் அதுவே முன்னேற்றத்தின் அறிகுறியாகும் இன்றைய நிலையில் உதைபந்தாட்டக் காலணி வாங்க இயலாத நிலையிலேயே வீரர்கள் உள்ளனர் எனச் சிலர் வாதிடலாம். உதைபந்தாட்டம் விளையாடுபவர்கள் எல்லாரும் காலணி அணிந்திருக்க வேண்டும் என விதி கூறுகின்றது ஆகையால் மாவட்டப் போட்டிகள், தேசியப் போட்டிகள் என்று விளையாடுவதற்கு இப்படியான வீரர்களுக்கு எப்படிச் சந்தர்ப்பம் கிடைக்கும்? வீரர்கள் தமது திறமைகளை எப்படித் தேசிய ரீதியில் காண்பிக்கப்போகின்றார்கள்? ஆகையால் வீரர்கள் எல்லோரும் காலணியுடன் விளையாட முயற்சிக்க வேண்டும் அன்றேல் அவர்கள் தமது திறமைகளை ஒரு சிறு பிரதேசத்துக்குள்ளேயே முடக்கிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

மத்தியஸ்தர்களை பொறுத்த வரையில் அவர்கள் தவறு விடமாட்டார்கள் என்று கூறமுடியாது அவர்களது

நோக்கிச் சென்றுள்ள பாங்கு இங்கு புலனாகிறது பந்துவீச்சில் சுழல் பந்து வீச்சாளர்கள் குமார் தர்மசேன 6 இலக்குகளையும், முரளிதரன், ஜயந்தவர்ணவீர, ஆகியோர் முறையே1- 2 என்றவா இறுலக்குகளைப் பெற்றுக் கொண்டனர்.

இலங்கையணி தம் முதலாவது இனிங்சில் 226 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்து நின்றனர். இதில் அவதானிக்கத்தக்க தென்னவெனில் அரவிந்த டீசில்வா பெற்ற 127 ஐ விட்டால் ஏனைய 10 வீரர்களும் சேர்ந்து சேகரித்த ஓட்டங்கள் எவ்வளவு என்பது தான் இதிலும் ஹசான் திலகரட்ன 34 ஓட்டங்களைத் தன் கணக்கில் எடுத்துக் கொண்டார். இங்குசுழல்பந்துவீச்சாளர்கள் அக்ரம் நசா முஷ்டாச் அகமட் இருவரும் 6 இலக்குகளைச் சமமாகப் பகிர்ந்து கொள்ள வேகப்பந்துவீச்சாளர்கள் அக்ரம் 3 இலக்குகளையும், யூனிஸ் 1 இலக்கையும் கைப்பற்றிக் கொண்டனர். பாகிஸ்தான் தன் இரண்டாவது இனிங்சை 164ஓட்டங்கள் கூடுதலாகப் பெற்ற நிலையில் ஆரம்பித்து 4இலக்குகள் இழப்பிற்கு 318ஓட்டங்கள் பெற்றுத்தம் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டனர். சயீட் அன்வர் 136, அமீர் சொகைய்ல் 65, சலீம் மாலிக் ஆட்டமிழக்காது 50 என்றவாறு ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். மூன்றாம் நாள் மதிய இடைவேளையின் போது இந்நிலையில் பாகிஸ்தான் தன் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டு 5 ஆட்ட வேளைகளின் போது 408 ஓட்டங்களைப் பெற்றால் இலங்கை வெற்றி என்ற நிலையை உருவாக்கியது.

சிறிலங்கா அணிக்கு இவ்விலக்கு வெற்றிப் பாதைக்குக் கடினமானதாக இருந்தா

தில்லை இங்கும் அதுவே நடைபெற்றுள்ளது றொசான் மகாநாமவுக்குச் சோடியாக சஞ்சீவறணதுங்கா ஆடியிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்பது ஒரு கருத்து ஆனால் அவர் புதியவர் பாகிஸ்தானுடன் பரீட்சை செய்ய முடியாது என்பது இன்னொரு கருத்து இதேவேளை முன்னணி ஆட்டக்காரரின் திறமையும் கேள்விக்குலக்காகின்றது, சனத் அசங்க, அரவிந்த, ஹசான் நால்வரும்பெற்ற ஓட்டஎண்ணிக்கை 22 மட்டுமே அசங்க மூப்பு அடிப்படையில் அர்த்தமற்ற வகையில் அணியில் தொடர்ந்தும் இடம் பெறுகிறார் என்றொரு குற்றச் சாட்டும் முன்வைக்கப்படுகின்றது, இக்குற்றச்சாட்டில் பிழை இல்லைப் போலவும் தென்படுகிறது மேலும் 41ஓட்டங்களைப்பெற்றநிலையில் அணித்தலைவர் பாரிய அடியொன்றை அடிக்க முற்பட்டு ஸ்டம் முறையில் அவுட்டாகியதும் கண்டிக்கப்படுகின்றது. அதோடு அரவிந்த முதல் இனிங்சில் சதம்போட்டவர் அந்த அனுபவத்தினூடே இரண்டாவது இனிங்சை வளர்த்தெடுக்க முயற்சித்திருக்கலாம் ஆனால் அவரும் மைதானத்தில் நிற்க விரும்பவில்லை இந்நிலையில் பின்வரிசை ஆட்டக்காரர்கள் ஒரு நாள் ஆட்டப்பாணியில் ஆடி 74 ஓட்டங்கள் சேகரித்துள்ளார்கள். இவர்கள் அண்மையில் சிறிலங்கா அணிக்குள் வந்தவர்கள் இப்படியாக ஏன் ஆடவேண்டும் என்று குற்றம் சாட்டப்படுகிறார்கள். மொத்தத்தில் சிறிலங்கா அணி டெஸ்ட் ஆட்டங்களுக்குத் தகுதியானதுதானா என்றொரு பாரதூரமான வினாவை எழுப்புகிறார்கள்.

சிறிலங்கா சிறந்ததொரு ஒருநாள் அணி. ஆனால் ஏன் டெஸ்ட் போட்டிகளில் சராசரியாகக் கூடச் செய்ய இய

லவதில்லை. டெஸ்ட் ஆட்டத்தின் பரிமாணங்கள் இவர்களுக்குப் புரியாதவையல்ல. அனுபவம் குறைவென்று கூறி விடவும் முடியாது, பாகிஸ்தானிய முகாமையாளர் இன்டிகாப் ஆலம் கருத்துக் கூறுகையில் தம் சொந்தத் திறமையில் சிறிலங்கா அணியினர் நம்பிக்கை கொள்ள வேண்டும். நின்று விளையாட வேண்டும் தமக்குள்ளேயே விவாதித்து அச்சக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்கின்றார்.

இது ஒருபுறம் இருக்க இரண்டாம் டெஸ்ட் ஆட்டத்திற்கு இளம் இரத்தங்களை சிறிலங்கா தெரிவாளர் கொண்டுவர இருக்கின்றனர். துலிப் சமரவீர, றுவன் கல்பகே, ரவீந்திர புஸ்பகுமார, சமிந்த வாஸ் ஆகியோரே அவர்கள். ஆனால் இரண்டாம் டெஸ்ட் ரத்துச் செய்யப்பட்டுள்ள நிலையில் மூன்றாம் டெஸ்டில் இப்புதுமுகங்களுடன் கூடிய புதிய அணிபாகிஸ்தானை எதிர் கொள்ளும் என்று நம்பலாம்

- நிர்மலன்




உதிர்வு:
15
07
1994

செல்வன்

## சிற்றம்பலம் அருட்செல்வம் (சந்துரு)

தங்கத்தில் குறையுண்டு
புடம்போட்டு எடுத்திடுவர்
எம் தம்பியில் குறையில்லை
புடம்போட்டு எடுப்பதற்கு.
பாசத்தில் மழையாக
சேவையில் மலையாக
குணத்தில் குன்றாக
எம் இதயம் எங்கும்
நீ நீக்கமற நிறைந்திடுவாய்
எம் தம்பி சந்துருவே

28-08-94 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அந்திபேட்டி கிரியைகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

கல்லூரி வீதி - சந்துருவின் குடும்பத்தினர்
பருத்தித்துறை.

(9199)

## சிந்தனைக்கு..

தெரிந்தது அனைத்தையும் சொல்லி விடாதே, கேட்பது அனைத்தையும் நம்பி விடாதே, முடிந்தது அனைத்தையும் செய்து விடாதே செய்ய முடியும் என்றும் சொல்லி விடாதே.

- அமெரிக்கப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 28-08-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024

தபால் பெட்டி எண் 05

## சமாதானமும் யுத்த நிறுத்தமும்

இனப்பிரச்சினைக்குச் சமாதான ரீதியாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட வேண்டும். அதன்மூலம் அரசியல் தீர்வு ஒன்றுகாணப்பட வேண்டும் எனப் புதிய அரசாங்கம் பிரசாரம் செய்து வருகின்றது. இது தொடர்பாக பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்காவும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான கேணல் அனுருத்த ரத்வத்தவும் அடிக்கடி தமது உரைகள் / அறிவிப்புக்களில் வெளிப்படுத்துகின்றனர்.

ஆனால் இவர்கள் இவ்வாறு பேசி வருகின்றபோதும் சிறிலங்கா ஆயுதப் படையினர் தாக்குதல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்ட வண்ணமே உள்ளன. உதாரணமாக ஓமந்தையில் விமானக் குண்டுவீச்சும், வடமராட்சிக் கடற்பரப்பிலும், கரையோரப் பகுதி மீதும் கடற்படையினர் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் பீரங்கித் தாக்குதல்களும் நடந்தவண்ணமே உள்ளன.

இதேவேளை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த இவ்விவகாரம் பற்றிப் பேசாமலும் இல்லை. ''இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணும் முகமாக விடுதலைப் புலிகளும் நல்ல சமிக்ஞையைக் காட்டுவதாக பத்திரிகைகள் மூலம் அறிய முடிகின்றது. இந்நிலையில் பாரிய யுத்தம் எதையும் நடத்தி அதனைக் குழப்ப நாம் விரும்பவில்லை'' எனக் கூறியுள்ளார். இதனை சமாதான விடயத்தில் அவரது அக்கறையை வெளிக்காட்டுவதாகக் கொள்ள முடியுமாயினும் அவரதுபேச்சில் சிறு தாக்குதல்களுக்கு அங்கீகாரம் மறைமுகமாக வழங்கப்பட்டுள்ளதாகவும் கொள்ள முடியும்.

ஆனால் தாக்குதல்கள் சிறியவையாக இருந்தால் என்ன? பெரியவையாக இருந்தால் என்ன? இவை சமாதானம்தொடர்பாக உருவாகிவரும் சுமுகமானதொரு அரசியற் சூழ்நிலையைக் கெடுத்து விடக் கூடியது என்பதே யதார்த்த நிலையாகும். இது ஒருவகையில் சமாதானத் தீர்வில் தமிழ் மக்களுக்கு உள்ள நம்பிக்கை

# எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக கட்சியையே குழப்பிய காமினி

''எனக்கும் ரணிலுக்கும் இடையே எந்தவித கருத்து வேறுபாடும் இல்லை நாம் இருவரும் ஒரே கட்சியின் கட்டுக்கோப்பினுள் வளர்ந்தவர்கள்'' என்று எதிர்கட்சித் தலைவராக தெரிவான காமினி திசாநாயக்காவின் குரல் பி.பி.ஸியில் ஒலித்த மறுநாள் கொழும்பில் வெளியான ஒரு பத்திரிகையில் எதிர்க்கட்சி தலைவர்க்கான பதவிக்கு காமினிக்கும் ரணிலுக்கும் இடையே இருந்து வந்த போட்டியை தவிர்க்க நாம் எவ்வளவோ முயன்று அது பலனளிக்கவில்லை என ஐ.தே.க பிரமுகர் ஒருவரின் செய்தி வெளிவந்திருந்தது.

மலையகத்தில் தொண்டமானின் இ. தொ. கா- கூட்டினால் ஐ. தே- கவிற்கு வெற்றி கிடைத்த ஆசனங்களில் ஒன்றில் தெரிவான காமினி திசாநாயக்காவும் கொழும்பு மத்தியில் அதிகப்படியான விருப்புவாக்குகளை பெற்ற ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்கட்சித் தலைவர் பதவிக்காகமிகத்தீவிரமாகவே முயன்றனர்

### ரணிலின் எதிர்ப்பு

தேர்தல் முடிவுகள் வெளிவந்து கொண்டிருந்த சமயம் ஐ.தே.கவின் வெற்றி வாய்ப்பு ஒரு சில ஆசனங்களால் நழுவிச்செல்லும் நிலைதோன்றுவதையடுத்து சில திரைமறைவு நடவடிக்கை மூலம் ஐ தே க அதிகப்படியான ஆசனங்களை பெற்று ஆட்சியமைக்கும் வகையில் நடந்து கொண்டார் காமினி இதற்கு ஜனாதிபதி விஜேதுங்கா உட்பட்ட சில ஐ தே க பிரமுகர்களினதும் பூரண ஒத்துழைப்பும் இருந்தது எனினும் இந்த சதி நடவடிக்கையை அறிந்த ரணில்விக்கிரமசிங்க தாமே நேரில் சென்று ஜனாதிபதியை சந்தித்தார்

பக்ஷவின் ஆணையை பெற்றுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியமைப்பதை எவ்வகையிலும் தடுக்கக்கூடாது என அவர் உறுதிபட ஜனாதிபதியிடம் கூறினார். உண்மை நிலவரத்தை ஐ தே க ஏற்கபழகவேண்டும் மக்கள் வழங்கிய தீர்ப்பை மதிக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

அத்துடன் நின்றுவிடாது ரணில் செயலிலும் காட்டினார் ஜனாதிபதியை சந்தித்த கையோடு அலரிமாளிகை சென்ற அவர் மறுநாள் அங்கு தமது இறுதியான செய்தியாளர் மாநாடு ஒன்றை கூட்டினார் 'வெற்றியும் தோல்வியும் அரசியலில் இடம்பெறுவது வழக்கம் தான் என்றும் ஜனநாயகவாதிகள் அனைவரும் மக்கள் அளித்த இத் தீர்ப்பை ஏற்பதே நல்லமுறையாகும்' என்றும் ரணில் அச் செய்தியாளர் மாநாட்டில் முக்கியமாக கூறினார் மக்களின் தீர்ப்பை தாம் மதிப்பதாகவும் பிரதமர் என்றவகையில் இதுவே எனது கடைசி செய்தியாளர் மாநாடு எனவும் கூறி அனைவரிடமிருந்தும் விடைபெற்றார் அத்துடன் தனது அலரிமாளிகையையும் விட்டு சிறிதுநேரத்தில் வெளியேறினார் சீரிய அரசியல் மரபைக் கொண்டவர் எனக்கூறப்படும் முன்னாள் பிரதமர் ரணில்விக்கிரமசிங்க.

இந்நிலையில்-பிரதமர் நிலைப்பாடு வேறுபட்டதாய் உள்ள நிலையில்-முன்னாள் ஐ தே.க ஆட்சியாளர்களால் ஒன்றுமே செய்யமுடியாது போயிற்று அவர்களது திரைமறைவு நடவடிக்கைகளும் தவிடுபொடியானது

### யார் எதிர்க் கட்சித் தலைவர்?

இந்நிலையில் ஐ தே க இனி எதிர்கட்சி தான் என்ற நிலையில் எதிர்கட்சி தலைவர் யார் என்ற இழுபறி மீண்டும் ஐ.தே.கவில் ஏற்பட்டது ஐ தே.கவில் முக்கிய பிரிவுகளாக இருக்கும் ரணில் கோஷ்டிக்கும் காமினி கோஷ்டிக்கும் இப்பதவி முக்கியத்துவம் மிக்கதொன்றாக இருந்தது இரு தரப்பும் தத்தமது கோஷ்டித் தலைவரையே எதிர்கட்சி தலைவராக்குவதில் தீவிரமாக நின்றன.

எதிர்க்கட்சித்தலைவரைஇரகசிய வாக்கெடுப்பு மூலமே தெரிவு செய்ய வேண்டும் என இதற்கு போட்டியிட்ட காமினி திசாநாயக்கா தெரிவித்தார் இந்நிலையில் ரணிலும் காமினியும் ஐ தே.க எம்.பிகளையும் சந்தித்து ஆதரவு கோரி விளக்கங்கள் அளித்து வந்தனர். பகிரங்கமாகவே நடந்த இந்நிகழ்வு ஐ.தே.க எவ்வளவு தூரம் பிளவுபட்டுள்ளது என்பதையும் பகிரங்கமாகவே காட்டியது.

### இரகசிய வாக்கெடுப்பு

இந்நிலையில் - எதிர்க்கட்சி தலைவர் பதவி தொடர்பாக ஐ தே கவினுள் கடும் போட்டிநிலை காணப்படுவதையடுத்து நிலைமையை சமாளிக்க புதன்று ஐ தே க பாராளுமன்ற குழு தனது தலைவரை தெரிவு செய்வதற்காக இரகசிய வாக்கெடுப்பு நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

முன்னைய அரசில் பிரதமராக இருந்தவரே அக்கட்சி தோல்வியுற்றால் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக வருவதே மரபு ரீதியாகும். இதற்கு எதிராக காமினி திசாநாயக்காஎடுத்த நிலைப்பாட்டினால் ஐ. தே. கவின் 94 எதிர்க்கட்சி எம். பிகளிடையே எதிர்க்கட்சித் தலைவரை தெரிவு செய்வதற்காக இரகசிய வாக்கெடுப்பு நடத்த எடுக்கப்பட்ட முடிவானது சந்திரிகா குமாரணதுங்கா பிரதமராக பதவி ஏற்கும் சம்பவத்திற்கு அடுத்தபடியான முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமாக கடந்த வாரத்தில் இருந்தது இந்தப் பின்னணியில் கடந்த புதன்காலை ஜனாதிபதி செயலகத்தில் ஐ தே க தலைவராக உள்ள ஜனாதிபதி விஜேதுங்கா தலைமையில் எதிர்க்கட்சி ஐ தே க பாராளுமன்ற குழுவின் கூட்டம் ஆரம்பமானது

### இ.தொ.கா. கலந்து கொள்ளவில்லை

தமது எதிர்க்கட்சி- தலைவரை தெரிவு செய்வதற்காக 94 ஐ தே க பாராளுமன்ற உறுப்பினர்களில் 87 பேர் அன்று சமுகமளித்திருந்தனர் இரகசிய வாக்கெடுப்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கலந்து கொள்ளாமை குறிப்பிடத்தக்க அம்சமாக இருந்தது இதேபோன்று முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரேயும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை எனினும் முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனா அங்கு சமுகமளித்திருந்தது பலரையும் வியப்பிலாழ்த்தியது இது அவர் ஐ தே க செயற்பாடுகளின் பின்னணியில் எத்தகையதோர் பங்கை வகிக்கிறார் என்பதை தெளிவாகவே காட்டும் ஒரு சாட்சியாக இருந்தது

### காமினி தெரிவானார்

இரகசிய வாக்கெடுப்பு முடிவடைந்து வாக்குகள் எண்ணப்பட்டும் முடிந்தது எனினும் முடிவுகள் பற்றிய விபரங்கள் இதில் போட்டியிட்ட காமினிக்கும் ரணிலுக்கும் மட்டுமே காண்பிக்கப்பட்டது அங்கிருந்த பலருக்கும்விசனத்தை ஏற்படுத்தியது இறுதியில் எதிர்கட்சித்தலைவராகவும் ஐ தே கவின் பிரதித்தலைவராகவும் காமினி திசாநாயக்காவே தெரிவானதாக அறிவிக்கப்பட்டது இவருக்கு ஆதரவாக 45 உறுப்பினர்கள்வாக்களித்திருந்தனர். ரணில் விக்கிரமசிங்கவுக்கு 42 வாக்குகள்கிடைத்திருந்தது. மூன்று அதிகப்படியானவாக்குகளால் காமினி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

### நிர்வாக திறனற்ற காமினி

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவை எதிர்த்து லலித் அத்துலத் முதலியுடன் சேர்ந்து அரசியல் குற்றப் பிரேரணையை கொண்டு வந்ததன் மூலம் ஐ. தே. கவைவிட்டு வெளியேற்றப்பட்டு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்ற கட்சியை ஆரம்பித்தவர் காமினி திசநாயக்கா, லலித்தின் கொலையைதொடர்ந்து அக்கட்சியின் தலைமைப்பொறுப்பை ஏற்ற காமினி திசாநாயக்கா தனது நிர்வாகத் திறனற்றநடவடிக்கையினாது கட்சிஎத்திசையில் செல்கிறது என்பதை அவரே அறியாத் திணறிக் கொண்டிருந்தார். கட்சியினுள்ளும் ஒழுங்கும் கட்டுக்கோப்பும் சீர்குலைந்தன. இந்நிலையில் பிரேமதாச கொலையைத் தொடர்ந்து ஜனாதிபதியாக பதவி ஏற்ற டி. பி. விஜேதுங்கா தத்தளித்துக் கொண்டிருந்த காமினி நோக்கி அபயக்கரம் நீட்டவே சமயம் பார்த்திருந்த காமினியும் தான் ஆரம்பித்த கட்சியை உதறித் தள்ளி விட்டு ஐ. தே கவினுள் மீண்டும் பாய்ந்தார். டி பி. விஜேதுங்காவின் ஆதரவுடன் அமைச்சரானார். ஒன்பதாவது பாராளுமன்றமும் கலைக்கப்பட்டது கண்டி மாவட்டத்தில் ஐ தே. க. வேட்பாளராக நிறுத்தப்பட்டார். ஒரு லட்சத்து 98 ஆயிரத்து 207 விருப்பு வாக்குகளை பெற்று பத்தாவது பாராளுமன்றத்தினுள்ளும் நுழைந்துவிட்டார். இப்போது புதிய பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர்.

### துஷ்யந்தன்

எதிர்காலத்தில் ஐ தே க எதிர்நோக்கும் சவால்களையும் தடைகளையும் மிகவும் சாதுரியமாக முகம் கொடுக்க தயாராக இருப்பதாக எதிர்க்கட்சி தலைவராக தெரிவான பின் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசிய காமினி தன்னிடம் ஆற்றல் அனுபவம் திறமை இருப்பதாக குறிப்பிட்டார். ஆனால் இவை அனைத்தும் எதற்காகபயன்படுத்தப்படும் என்பதைக் கூற அவர் தவறிவிட்டார்.

# 20கோடி ரூபா விரயத்தை புதிய அரசு தடுத்தது

## தொலைத்தொடர்பு அமைச்சர் தகவல்

# அமைச்சரவை அங்கீகாரமின்றி 22 கோடி நிதி திறைசேரி ஒதுக்கியது

(கொழும்பு)

அமைச்சரவையின் அங்கீ...

...டத்திற்குப் பின்னர் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன்...

தொடர்பாக முன்னாள் நிதி அமைச்சரும் ஜனாதிபதியு...

அரசியற் சூழ்நிலையைக் கெடுத்து விடக் கூடியது என்பதே யதார்த்த நிலையாகும். இது ஒருவகையில் சமாதானத் தீர்வில் தமிழ் மக்களுக்கு உள்ள நம்பிக்கையைப் போக்கடிக்கலாம். மறுவளமாக விடுதலைப் புலிகள் இயக்கமும் தாக்குதல்களை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தையும் உருவாக்கலாம். ஆகையினால் இவ்வாறானதொரு நிலையில் சமாதானப் பேச்சுக்களே அர்த்தமற்றதாகப் போகலாம்.

அதற்கும் அப்பால் இதனைத் தாண்டி பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படினும் தாக்குதல்கள், மோதல்கள் இடம்பெறும் சூழ்நிலையில், இராணுவச் சமநிலை பாதிக்கப்படலாம். இதனால் வலு அதிகரிக்கும் தரப்பு மறு தரப்பின் மீது அழுத்தத்தைப் போட முற்படலாம். இது பேச்சுவார்த்தை ஆரம்பித்த சூழ்நிலையை விட்டு வேறொரு சூழ்நிலையை உருவாக்கி விடவும் கூடும். இந்த நிலையில் இது சமாதானத்திற்கு விரோதமானதாகவும் / முட்டுக்கட்டை ஏற்படுத்துவதாகவும் அமைந்து விடவும் கூடும்.

இந்தவகையில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வொன்று காண்பதானால், தாக்குதல் சிறிதாக இருந்தால் என்ன? பெரிதாக இருந்தால் என்ன? யுத்தம் நிறுத்தப்பட்டே ஆகவேண்டும்- இதுவே உலகில் சமாதானத்திற்கான நடைமுறைச் சாத்திய வழியாகக் கடந்த காலத்தில் நிரூபிக்கப்பட்டும் உள்ளது-

இந்நிலையில், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு உளப்பூர்வமாகவே புதிய ஆட்சியாளர்கள் விரும்புவார்களேயானால் அதற்கு முதலில் யுத்தநிறுத்தத்தைக் கொண்டு வருவதே சிறந்ததொரு வழியாகும். அதுவே சமாதான ரீதியில் இனப்பிரச்சினைத் தீர்விற்கு முன்னேறிச் செல்ல வழிவகுக்கும்-

இனப்பிரச்சினைத் தீர்விற்கு யுத்தநிறுத்தத்தின் தேவை பற்றி விடுதலைப் புலிகள் இயக்கம் தெளிவாகவே உணர்ந்துள்ளமை அதன் அறிவிப்புக்களில் இருந்து தெரிய வருகின்றது- ஆனால் இதனை வலியுறுத்துவது பேச்சுவார்த்தைக்கான நிபந்தனை விதிப்பு என்று நோக்கப்படும் என்ற நிலையிலேயே அதன் அவசியத்தைக் கூறிவிட்டு விடுதலைப் புலிகள் ஒதுங்கிக் கொண்டுள்ளனர் என்றே எண்ண வைக்கின்றது.

இந்தநிலையில் இதனைப் புரிந்து கொள்வதும், அதற்கேற்ப நடவடிக்கை மேற் கொள்வதும் அரசின் கடமையாகும். இதில் அரசாங்கம் அசிரத்தை காட்டுமானால், அது அரசியல் தீர்வு விடயத்தில் அதுகாட்டும் அசிரத்தையாகவே கொள்ளப்படும்.

## தொலைத்தொடர்பு அமைச்சர் தகவல்

(கொழும்பு)

இரு வெளிநாட்டு நிறுவனங்களால் பெற்றுக்கொள்ளப்படவிருந்த 20கோடி ரூபாவை சேமிக்க முடிந்துள்ளதாக தபால் தொலை தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பதவிஏற்றதும் தாம் மேற்கொண்ட விசாரணையைத் தொடர்ந்து இவ்வாறு வீண் விரயமாக இருந்த 20 கோடி ரூபா காக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். கொழும்பு பெரும்பாக தொலைபேசி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தொலைபேசிகளையும் கேபிள்களையும் வழங்கவென ஜப்பானிய நிறுவனம் ஒன்று 70 கோடி பெறுமதியான கேள்விப்பத்திரத்தை சமர்ப்பித்திருந்தும் 90 கோடி ரூபா கேள்விப்பத்திரத்தை சமர்ப்பித்திருந்த ஜப்பானிய-அமெரிக்க நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

இது தொடர்பாக கிடைத்த விபரங்களையடுத்து ஒப்பந்தம் கைச்சாத்திடுவது இடைநிறுத்தப்பட்டது இதற்கான அங்கீகாரத்தை முன்னைய அமைச்சரவை வழங்கியிருந்தது இது தொடர்பாக விசாரணை நடத்த விசேட குழுஒன்று நியமிக்கப்பட்டுள்ளது இக்குழுவின் அறிக்கையைத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் கூறியுள்ளார்.

(கொழும்பு)

அமைச்சரவையின் அங்கீகாரம் இல்லாமல் திறைசேரியில் இருபத்திரண்டு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக திறைசேரி விடுத்த அறிக்கை ஒன்றின்மூலம் தெரியவந்துள்ளதாக சிறிலங்கா பிரதமரும் நிதி அமைச்சருமான சந்திரிகா குமாரணதுங்காவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

சென்ற வரவு செலவு திட்டத்திற்குப் பின்னர் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் திறைசேரியில் இருந்து ஒதுக்கப்பட்ட அறுபது கோடி ரூபாவுக்கு மேலதிகமாக இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் எனவே இது தொடர்பாக உடனடியான விசாரணை மேற்கொள்ளப்பட்டு பூரண அறிக்கையொன்றை தயாரித்து தன்னிடம் சமர்பிக்குமாறு மத்திய வங்கி ஆளுநருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவ் விடயம் தொடர்பாக முன்னாள் நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான டி. பி. விஜேதுங்காவுடன் இது தொடர்பாக விரிவான பேச்சுவார்த்தைகளை சந்திரிகா குமாரணதுங்கா நடத்தியதாகத் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு மறைமுகமான முறையில் திறைசேரியில் இருந்து பெறப்பட்ட நிதியைக் கொண்டு அமைச்சர்கள் பலர் சுகபோக வாழ்க்கை நடத்தியதாகவும் மேலும் தெரிய வந்துள்ளது.

## ஆடம்பரக்கார் பாவனை; அமைச்சர்களுக்கு தடை

(கொழும்பு)

அமைச்சர்களின் ஆடம்பரக் கார் பாவனைக்கு முற்றுப் புள்ளி வைக்க சிறிலங்கா அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது ஆடம்பரக்கார் இறக்குமதியை தடைசெய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது அமைச்சர்களிடமிருக்கும் கார்களை திரும்பப் பெற்று அவற்றை விற்பனை செய்துவிடவும் அரசு திட்டமிட்டுள்ளது அமைச்சர்களின் பென்ஸ், மற்றும் பி. எம். டபிள்யூ போன்ற ஆடம்பரக் கார்களை பகிரங்க ஏலத்தில் விற்று அதன் மூலம் பெறப்படும் பணம் பயனுள்ள வகையில் செலவிட அரசு முடிவு செய்துள்ளதாக தெரியவருகிறது.

இவ் விடயம் குறித்து அமைச்சர்களுடன் கலந்துரையாடிய பிரதமர் சந்திரிகா, கார்களை ஏலம் மூலம் விற்றுப் பெறப்படும் பணம் புனர்வாழ்வு புனர்நிர்மாணப் பணிகளுக்கு செலவிடுவதற்கு வசதியாக அப்பணத்தை அமைச்சர் எம். எச். எம் அஷ்ரப்பிடம் வழங்கவுள்ளதாகவும் சந்திரிகா அப்போது குறிப்பிட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேசமயம் முன்னாள் அமைச்சர்களின் உத்தியோகபூர்வ வாகனங்களை திரும்பப் பெறும் நடவடிக்கையும் தீவிரமாக்கப்பட்டுள்ளது.

## சு. க. அமைப்பாளர் மகன் தேர்தலன்று சுட்டுக்கொலை

(கொழும்பு)

தென்னிலங்கையில் தேர்தல் தினத்தன்று சுதந்திரக் கட்சி அமைப்பாளர் ஒருவரின் 5 வயது மகனை இனந்தெரியாத குழு ஒன்று கடத்திச் சென்று சுட்டுக் கொன்றுள்ளது.

எகிலியகொடவில் நடைபெற்ற இச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது; அன்று காலை 11.00 மணியளவில் மேற்படி சிறுவனின் தந்தை வாக்களிக்க சென்றுவிட்டதாகவும் தாயார் அருகிலுள்ள வாவியில் குளிக்க சென்றுவிட்டதாகவும் அப்போது விளையாடிக் கொண்டிருந்த இச் சிறுவனை ஒரு குழுவினர் தூக்கி சென்றதாகவும் அயலவர்கள் தெரிவித்தனர். சிறுவனைத் தேடிச்சென்ற பெற்றோரும் அயலவரும் அருகிலுள்ள காட்டில் அந்த 5வயது சிறுவன் கைகள் பின்னால் கட்டப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டு சடலமாக கிடப்பதைக் கண்டனர்.

இது குறித்து நீதிமன்றில் சாட்சியமளித்த இச் சிறுவனின் தந்தை, தாம் சுதந்திரக் கட்சி அமைப்பாளர் என்பதால் இது அரசியல் ரீதியான கொலை எனக்குறிப்பிட்டார் அவர் குறிப்பிட்ட நான்கு சந்தேக நபர்களில் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## எயர் பஸ் கொள்வனவை பிற்போட சந்திரிகா முடிவு

எயர் லங்காவிற்கு என எயர் பஸ் விமானங்களை கொள்வனவு செய்யும் ஒப்பந்தத்தை சந்திரிகா அரசு பிற்போட்டுள்ளது. எயர். லங்கா நிறுவனம் இந்தரக விமானங்களை வாங்குவது தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி நீண்டகாலமாக எதிர்ப்பு தெரிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போது ஆட்சியமைத்துள்ள இம் முன்னணி முன்னைய அரசின் காலப் பகுதியில் எயர் பஸ் விமானங்களை கொள்வனவு செய்ய மேற்கொண்டிருந்த முயற்சிகளை தற்போது பிற்போட்டுள்ளது. கொள்வனவிற்கான ஒப்பந்தம் நாளை திங்கள் கைச்சாத்தாக இருந்த போதிலும் பிரதமரும் நிதியமைச்சருமான சந்திரிகா இதை பிற்போட முடிவு செய்துள்ளார்.

இந்த கொள்வனவு ஒப்பந்தம் கைச்சாத்தானால் அரசுக்கு 500 கோடி ரூபா நட்டம் ஏற்படும் எனவும், எனவே இதை நடுக்க இந்த கொள்வனவு பற்றி நன்கு ஆராய பிரான்ஸ் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது பிற்போடப்பட்டுள்ளது எனவும் நிதியமைச்சின் செயலாளர் ஏ எஸ். ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

## கிராமசேவை அதிகாரிகள் சேவையில் மாற்றம் வரும்

-- அமைச்சர் அமரசிறி தொடங்கொட

(கொழும்பு)

கிராமசேவை அதிகாரிகள் சேவையில் மாற்றங்கள் செய்யப்படும் என்றும் வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதில் கிராமசேவை அதிகாரிகள் ஈடுபடுத்தப்படமாட்டார்கள் என்றும் உள்விவகார - மாகாண சபைகள் கூட்டுறவுத்துறை அமைச்சர் அமசிரறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

சகல அரசியற்கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தியபின் வாக்காளர் பதிவில் புதியமுறை அறிமுகப்படுத்தப்படும் எனவும் கிராமசேவை அதிகாரிகளுக்கு எதிராக பல் வேறு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# ஊழியர் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ள முடியாதது

## துணைவேந்தர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊழியர் தொழிற்சங்கத்தின் பல கோரிக்கைகளுக்கு நாம் இணங்கிவந்துள்ளோம். ஆனால் இவர்கள் தற்சமயம் முன்வைத்த கோரிக்கையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் க. குணரட்ணம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இம் முடிவை நேற்றுக் காலை கூடிய பல்கலைக்கழக மூதவை ஏகமனதாக எடுத்துள்ளதாக தெரிவித்தார்.

எனவே பகிஷ்கரிப்பில் ஈடுபடும் பல்கலைக்கழக ஊழியர் தொழிற் சங்கம் அதை நிறுத்த ஊழியர்கள் வேலைக்குத் திரும்ப வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன் ஊழியர் தொழிற்சங்கத்தின் இப் போராட்டத்தில் இருந்தும் ஊழியர் தொழிற்சங்க அங்கத்துவத்தில் இருந்தும் பல ஊழியர்கள் விலகி வேலைக்கு சமுகமளித்து வருவதாகவும்,

ஊழியர் தொழிற்சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபடுவதென்றால் பல்கலைக்கழக பிரதான முன் வாயில் முன்பாக நின்று தமது போராட்டத்தை நிகழ்த்தலாம். அதை விடுத்து பல்கலைக்கழக நிர்வாகப் பகுதியை இயங்கவிடாமல் போராட்டம் செய்வது எந்த வகையிலும் அர்த்தமற்றது என அவர் மேலும் தெரிவித்தார். (பா)

# யாழ். பல்கலை ஊழியர் நேற்றும் வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊழியர் தொழிற்சங்கம் நேற்றுக் காலையும் யாழ். பல்கலைக்கழக நிர்வாகப் பகுதியின் முன்பாகதமதுமறியல் போராட்டத்தினை மேற்கொண்டனர்.

நேற்றுக்காலை எட்டு மணியில் இருந்து மறியலில் ஈடுபட்ட ஊழியர்கள் சுலோகங்களைத் தாங்கிய வண்ணம் மறியலில் ஈடுபட்டனர்.

காலை ஒன்பது மணியளவில் யாழ். பல்கலைக்கழக மூதவை கூடுவதற்கு வந்த சமயம் அனைத்து ஊழியர்களும் அலுவலகம் முன்பாக அமர்ந்திருந்து மறியலில் ஈடுபட்டனர்.

பின்னர் துணைவேந்தரிடம் ஊழியர் தொழிற்சங்கம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தது எனினும் ஒன்பது மணியளவில் மூதவையினர் கூட்டத்தை நடாத்திவிட்டு அங்கிருந்து சென்று விட்டனர்.

அத்துடன் நேற்றுக்காலையில் இருந்து நண்பகல் வரை தமிழீழக் காவல்துறையினரும் பல்கலைக்கழகம் முன்பாக காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

ஊழியர்களின் இவ் வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடர்ந்து பல அத்தியாவசிய சேவைகள் ஸ்தம்பிதமடைந்து வருகின்றன.

இதனைத்தொடர்ந்து யாழ் பல்கலைக்கழக நிர்வாகத்தினர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடாத ஊழியர்கள் மற்றும் வழிகளைக் கொண்டு அத்தியாவசிய சேவைகளை வழங்கி வருகின்றனர்.

### காங்கேசன்

உற்பத்தி இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது சீமெந்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்க சீனா, இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து சீமெந்தை இறக்குமதி செய்ய அரசு முயலுவதாகவும் அவர் தெரிவித்தார்.

புத்தளம் சீமெந்து ஆலையில் உற்பத்தி பாதித்திருப்தும், தனியார் சீமெந்தை இறக்குமதி செய்யாமல் விட்டிருப்பதும் இத் தட்டுப்பாட்டுக்கான காரணங்கள் என

### ஆயுத

யுள்ளார்.

பாராளுமன்ற ஒப்புதலைப் பெறாமல் இவ் ஒப்பந்தம் ஏற்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.


### குடியிருப்பு மீது

டைந்தனர். வீடுகள் சிலவும் சேதமடைந்தன.

இத் தாக்குதலின்போது அதே இடத்தைச் சேர்ந்த க. முத்தர் என்றழைக்கப்படும் வயோதிபரே பலியானவராவார் மேலும் ரணீஸ், சந்திரன் என்பவர்கள் காயமடைந்த நிலையில் வைத்திய

# வீரச்சாவு

பூநகரிப் பகுதியில் கடந்த 23-ம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதலில் 4 போராளிகள் வீரச்சாவடைந்தனர். வீரச்சாவடைந்த கப்டன் ஜெயக்காந்தன் / ஜீவகுமார் (கோபாலபிள்ளை சுதாகரன் அம்பாறை) என்னும் போரா



**கப்டன் ஜெயக்காந்தன் (ஜீவகுமார்)**

ளியின் உருவப்படம் இங்கு பிரசுரமாகியுள்ளது. ஏனைய மூன்று போராளிகளினதும் உருவப்படங்கள் நேற்றைய ஈழநாதத்தில் வெளிவந்தமை தெரிந்ததே.

### வரவுசெலவுத்

வரவுசெலவுத் திட்டத்தின் செலவினங்கள், வரவுகள் பற்றிய விபரங்கள் பூர்த்தியாகி வருகின்றன. ஆனால் புதிய அரசின் வேலைத்திட்டங்கள் நிவாரணங்கள் பற்றியவேலைகள் செய்யப்படவுள்ளன.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதிதேர்தலின் முன்பாக வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு துரித முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நிதியமைச்சு வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

### சொத்தி

இவர்களுக்கு எதிரான வழக்கில் சாட்சிகள் கடந்த இரு தவணைகளாக வராமையினால் இரு குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் விடுவிக்கப்படுவதாக நீதவான் கூறினார்.

இருவரையும் பிணையில் விடுதலை செய்வதை பொலிசார் ஆட்சேபித்தனர் எனினும் விடுதலையான இருவரும் நாட்டைவிட்டு வெளியேறக் கூடாது. பிரதி ஞாயிறு

# தாய்லாந்திற்குள் தமிழர் நுழைவதை கட்டுப்படுத்த சிறிலங்கா கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் தமிழர்கள் தாய்லாந்தை ஒரு தளமாகப் பயன்படுத்துவதாகவும் இதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கும்படியும் கொழும்பிலுள்ள தாய்லாந்து தூதுவர் ஊடாக தாய்லாந்து அரசுக்கு இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது-

ஐரோப்பாவினுள் நுழைவது தொடர்பாக அந் நாடுகள் பல கட்டுப்பாடுகள் விதித்திருப்பதைத் தொடர்ந்து போலி ஆவணங்கள் தயாரிப்பதற்கான ஒரு மையமாக தாய்லாந்து பயன்படுத்தப் படுவதாகவும் கொழும்பிலுள்ள இலங்கைத் தமிழர் பலர் இதைப் பயன்படுத்தி ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதாகவும்கூறப்படுகிறது

தாய்லாந்து பொலிசாருக்கும், விமானநிலைய அதிகாரிகளுக்கும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படி பணிப்புரை விடுக்கப்பட்டிருப்பதாகவும், ஐரோப்பாவினுள் புகும் ஒரு நுழைவாயிலாக தாய்லாந்துவை இலங்கைத் தமிழர் பயன்படுத்துவது கட்டுப்படுத்தப்படும் எனவும் கொழும்பிலுள்ள தாய்லாந்து தூதுவர் நேற்றுத் தெரிவித்தார்.

### 3 இலட்சம்

தனக்கு நன்கு தெரிந்த மாகாணசபை உறுப்பினர்களின் பெயர்கள் கூட வாக்காளர் இடாப்பிலிருந்து அகற்றப்பட்டதாகவும் சுட்டிக்காட்டிய அமைச்சர் இது குறித்து சகல கட்சி பிரதிநிதிகள் குழுவொன்று கூட்டப்படும் எனவும் உறுதியளித்துள்ளார்:

### இரு போராளிகள்

கப்டன் தமிழ்வேந்தன்/சதீஸ் (சந்திரதாஸ் சந்திரகுமரன், திருகோணமலை) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

முல்லை மாவட்டத்தில் கடந்த 25-ம் திகதியன்று ஏற்பட்ட விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார். வீரச்சாவடைந்த வீரவேங்கை செந்தமிழன் (செல்வராசா ஜெயராசா, கற்கோவளம் பருத்தித்துறை) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

இம்மாவீரரின் வித்துடல் இன்று காலை 10.00 மணிக்கு அணிவகுப்பு மரியாதையுடன் இவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு கற்கோவளம் பாடசாலையில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு வீரவணக்கக் கூட்டம் இடம்பெறும் வீரவணக்கக் கூட்டம் நிறைவுற வடமராட்சி கோட்ட மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்

### மகளிர்

னார்.

டோறா படகு வடிவிலான ஊர்தியில் கப்டன் அங்கயற்கண்ணியின் திருவுருவப்படம் மானிப்பாய் தியாக சீலத்திலிருந்து போராளிகளும் பொதுமக்களும் அணிவகுத்துச் செல்ல மானிப்பாய் மாவீரர் கலையரங்கத்தை அடைந்தது. அங்கு மகளிர் படை அணியினரின் பாண்ட் இசையுடனான அணி வகுப்பு மரியாதையைத் தொடர்ந்து மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் அவர்கள் ஈகச்சுடரை ஏற்றி நிகழ்வைதொடக்கிவைத்தார்

கடற்கரும்புலிகப்டன்அங்கயற்கண்ணியின்திருவுருவப் படத்திற்கு பெற்றோர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து போராளிகளும், பொது மக்களும் மலரஞ்சலி செலுத்தினர். அதைத் தொடர்ந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்ட பின் நினைவுரைகள் ஆரம்பமாகின

முதலில் தலைமை உரையை தீவகக் கோட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் மாமகள் நிகழ்த்தினார். அவரைத்தொடர்ந்து தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் அவர்கள் உரையாற்றினார். அடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் தமிழவள் உரை நிகழ்த்தினார்.

அடுத்து கடற்புலிகளின் விசேட தளபதி திரு. சூசை அவர்கள் நினைவுரையாற்றினார். தொடர்ந்து தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம், செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜெனனி ஆகியோரின் உரைகளுடன் நினைவுரை நிறைவு பெற்றது, தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (சி)(தி)

### ரஷ்ய

ர்தி, பயணிகள் விமானம், ரோந்துப் படகுகள் மற்றும் பல இராணுவ சாதனங்கள்

### கடலிலும்

லும் ஆண்களும் பெண்களுமாக முந்நூறுபேர், 18 கிலோமீற்றர் நீளமான அந்தக் கடல்வழி பயணத்தின் போது படகிலிருந்தும் தவறி வீழ்ந்தும் செத்திருக்கிறார்கள்.

படகு மூழ்கும் போது, கரையை நோக்கி நீந்த முடியாத நிலையில் செத்திருக்கின்றார்கள் அதில் பலர் பெண்கள்.

அங்கயற்கண்ணி வீட்டிலிருந்த காலங்களில் குறிப்பாக மூன்று ஆண்டுகளுக்கு முன்னர், கடலென்றால், அந்தக் கடல் அலைகளோடு பழக்கமில்லாத நிலையில் இருந்த அங்கயற்கண்ணி இன்று ஒரு வரலாற்று சாதனையைப் படைக்க முடியும் என்றால் அவருடைய மன உறுதிதான் காரணம் அவர் சென்று சாதனை படைத்த கடல், கடல் நீரேரியல்ல. ஆழக்கடல் காங்கேசன்துறை துறைமுகம் 45 அடி ஆழமான கடல் பகுதி. அந்தக் கடல் பகுதியில் தான், கடலென்றால் என்னவென்று தெரியாத அங்கயற்கண்ணி விசேட பயிற்சி ஒன்றின் போது, 17 கடல் மைல் அதாவது 35 கிலோமீற்றர் நீளமான கடல் பகுதியை 8 மணித்தியாலமும் 27 நிமிடங்களில் நீந்தி முடித்தவர்.

அந்த அங்கயற்கண்ணி இன்று கடற்பரப்பில் ஒரு வரலாற்றுச் சாதனையைப் படைத்திருக்கின்றார்.

இந்தக் கட்டளைக் கப்பலைவிட காங்கேசன் துறை கடற்படை தலைமையகமாக - வடபகுதி கப்பல் தளமாகச் செயற்பட்ட இந்தக் கட்டளைக் கப்பல் - கப்டன் அங்கயற்கண்ணியின் வரலாற்றில் - அதிகாலை, இரவு 12.30 மணிக்கு தாக்குதல் மேற்கொண்டு காலையில் படிப்படியாக அந்தக் கப்பல் மூழ்கிக் கொண்டிருந்தது அதை கடற்பரப்பில் நின்றவர்கள் தங்களின் கண்களால் பார்த்துக்கொண்டிருந்தார்கள்

துணையாக நின்ற டோறா படகு ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள்ளாகவே மூழ்கிவிட்டது.

இந்தச் செய்தியை சிறிலங்கா கடற்படை இருட்டடிப்புச் செய்துள்ளது. ஆனாலும் இந்த வரலாற்று நிகழ்வின் மூலம், பெரியதொரு சாதனையைப் படைத்திருக்கின்றார் அங்கயற்கண்ணி-

பயிற்சியின் போதும் சரி, போராட்டகளத்தின் போதும் சரி, பூநகரி சமரில் விழுப்புண்ணடைந்து வீட்டில்நின்ற வேளையில், லீவு நாட்களின் போது வீட்டாரிடம் விடைபெற்று வருகின்ற வேளையில் ஒருவிசேட பயிற்சிக்காக நான் செல்கின்றேன், இந்த விசேட பயிற்சியை முடித்து ஒரு நிறைவான பணியை திருப்தியோடு முடிப்பேன் என தாயாரிடம் கூறிவிட்டு வந்தவர். தன்னுடைய வறுமை நிலையையோ, குடும்ப நிலையையோ எதுவுமே கருத்தில் எடுத்துக் கொள்ளவில்லை.

இந்தக் கடுமையான பயிற்சியை - கடலென்றால் - தண்ணீர் என்றால்-எத்தனையோ பேருக்கு பயம். இந்த ஆழக் கடலில் இந்த மகளிர் ஒரு வரலாற்று சாதனையை நிகழ்த்தியிருக்கின்றார்,

இந்தக் கடுமையான பயிற்சிக்குரிய முழுமையான திட்டத்தை எமது தேசியத் தலைவர் வழங்கினார்- இந்தத் தாக்குதலுக்குரிய வியூகம் தேசியத் தலைவர் அவர்களால் திட்டமிடப்பட்டது. இதற்கான பயிற்சியை தானே நடத்தினார்-

தலைவரின் வழி காட்டலிலே இச்சாதனையை அங்கயற்கண்ணி நேர்த்தியாகச் செய்து முடித்துள்ளார்-

நீந்துவதில், படகோட்டுவதில் ஆண்களுக்குப் பெண்கள் சளைத்தவர்களல்ல-

நீங்கள் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கினால் மகளிர் கடலில் புதிய வரலாற்றைப் படைப்பார்கள்-

பலாலியில் பத்தாயிரம் படையினரும் வெற்றிலைக்கேணியில் ஐயாயிரம் படையினரும் கடற்படையின் பலத்தோடுதான் பின்னிப் பிணைந்து உள்ளனர்.

கடல் விநியோகத்தை எதிர்பார்த்துத்தான் வடக்கிலும் சரி, கிழக்கிலும் சரி முகாம்கள்

### பாணின்

வற்றின் விலைகளை எவ்வாறு குறைப்பது என சிந்தித்தேன் அதற்கிணங்க கோதுமை மா இறக்குமதியாளர்களுடன் பேச்சு நடத்தினேன் இறக்குமதி செய்வதற்காக வரும் மாவில் தமது இலாபத்தில் ஒருபகுதியை குறைத்துக்கொண்டு இறக்குமதி செய்யுமாறு இறக்குமதி கம்பனிகளை வேண்டினேன் இதற்கு அவர்கள் இணங்கினர்.

துும், தனியார் சீமெந்தை இறக்குமதி செய்யாமல் விட்டிருப்பதும் இத் கட்டுப்பாட்டுக்கான காரணங்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

க. முத்தர் என்றழைக்கப்படும் வயோதிபரே பலியானவராவார் மேலும் ரணீஸ், சந்திரன் என்பவர்கள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். (யோ)

சார் ஆட்சேபித்தனர் எனினும் விடுதலையான இருவரும் நாட்டைவிட்டு வெளியேறக்கூடாது. பிரதி ஞாயிறு தோறும் பொரளை பொலிசில் ஆஜராகி கைபொப்பமிட வேண்டும் எனவும் நீதவான் கட்டளையிட்டார்.

கூட்டம் இடம்பெறும் வீரவணக்கக் கூட்டம் நிறைவுற வடமராட்சி கோட்ட மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு சகல இராணுவ மரியாதையுடன் புனித விதைகுழியில் வித்துடல் விதைக்கப்படும்.

ரஷ்ய
ர்தி, பயணிகள் விமானம், ரோந்துப் படகுகள் மற்றும் பல இராணுவ சாதனங்கள் விரைவில் கொழும்பிற்கு வரவுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

டிருந்தார்கள்

துணையாக நின்ற டோறா படகு ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள்ளாகவே மூழ்கிவிட்டது.

காங்கேசன்துறை கரையிலிருந்து ஒரு கிலோ மீற்றருக்கு கூடிய பகுதியில் வந்து, அப்பகுதியில் இத்தலைமையகக் கப்பல் நிலை கொண்டு, பருத்தித்துறை கடற்பரப்பு வரைக்கும் எந்தவொரு பெரிய படகு நடமாடினாலும் தன்னுடைய ராடர் சாதனம் மூலம் அவதானித்து பல பொது மக்களையும் விடுதலைப் புலிகளுக்கு சொந்தமான பல படகுகளையும் நிர்மூலமாக்குவதற்கு இந்தத் தலைமையகக் கப்பலே காரணமாக இருந்தது.

அந்தத் தலைமையகக் கப்பல், கப்டன் அங்கயற்கண்ணியால் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது.

பலத்தோடுதான் பின்னிப் பிணைந்து உள்ளனர்.

கடல் விநியோகத்தை எதிர்பார்த்துத்தான் வடக்கிலும் சரி, கிழக்கிலும் சரி முகாம்கள் நிலைகொண்டு இருக்கின்றது.

ஆனையிறவு சமரில் வெற்றி கொள்ள முடியாமல் போனமைக்கு வெற்றிலைக்கேணியில் கடல்வழியாக இராணுவம் தரை இறக்கப்பட்டு இன்னொரு போர்முனை திறக்கப்பட்டதுதான் காரணம்.

இன்று எந்தவொரு இராணுவ நடவடிக்கை நடத்துவதாக இருந்தாலும் இந்தக் கடற்படையின் பக்க பலத்தோடுதான் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த கடல் விநியோகம் உடைக்கப்படுவதற்கு ஆண்களும் பெண்களுமாக இந்த அணியில் தலைவரின் வழிகாட்டலில் தக்க பயிற்சியை எடுத்துக்கொண்டு இந்த வரலாற்றை படைப்பார்கள். இது உறுதி'' என்றார் அவர்.


## தியாகி திலீபன்
## 7ஆம் ஆண்டு நினைவு தின
### கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகள்

தமிழீழ மாணவர்களே!
விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு
மகளிர் பிரிவினர்
அளிக்கும் இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
உங்கள் படைப்பாற்றலைக் காட்டிப் பெறுமதிமிக்க
பரிசுகளையும் சான்றிதழ்களையும் பெற்று மகிழுங்கள்

போட்டி விதிமுறைகள்: 22. 08. 94 ஈழநாதம் பார்க்கவும்

போட்டி முடிவுத் திகதி: 10. 09. 94

விடுதலைப் புலிகள்
மாணவர் அமைப்பு (மகளிர்)

(சி-10169)

யாழ். ஸ்ரீதரில்
காலை 10.30 மணிக்கு
இன்று மட்டும ''மண்ணுக்காக''
தினசரி 4-00, 6-00 மணிக்கு
# CIRCUS
ஒரு சைக்கிளில் 20 பேர் பயணம்!
பந்தின்மேல் கரடியின் நடனம்!
உருளையின் மேல் யானையின் ஆட்டம்!
ஒட்டகத்தின் சாகசம்!
100 அடி உயரத்தில் இருந்து காருடன் பாயும்பெண்!
இவைகளைக்காண இன்றே வாருங்கள் ஸ்ரீதருக்கு!
சனி, ஞாயிறு தினங்களில் பி.ப. 2.00 மணிக்கு மட்டும்
**யூன் - 94 ஒளிவீச்சு** காண்பிக்கப்படும்.

பேராசிரியர் துரைராசா அவர்களைக் கௌரவித்து தமிழீழ தேசியத் தலைவர் விருதுவழங்கும் வைபவமும் பேராசிரியரின் இறுதி ஊர்வலமும் ஒளிவீச்சில் இடம் பெறுகின்றது.

(சி-10173)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய
# ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி 21-வது விழா

காலம்:- 29 - 08 - 1994 திங்கட்கிழமை

மங்கள இசை: 1. K. M. பஞ்சாபிகேசன் குழுவினர் (சாவகச்சேரி)
2. M. கோவிந்தராஜன் குழுவினர் (தொண்டைமானாறு)
3. சிவகுமார் குழுவினர் (பொலிகண்டி)

சமயப்பேருரை: ''அத்வைத அமுதம்'' கரவைக் கிழார் அவர்கள்

பட்டிமன்றம்: 9.30 முதல் 11.30 வரை
அவதார நோக்கத்தின் நிறைவுக்காக பெரிதும் துயருற்றவள்

| சீதையே ! | பாஞ்சாலியே ! |
|---|---|
| 1. திரு. T. கலாமணி (விரிவுரையாளர் யாழ். பல்கலைக் கழகம்) | 1. திரு. கி. நடராசா (துணை அதிபர் நெல்லியடி ம. ம. வி.) |
| 2. திரு. K. கலாகரன் (ஆசிரியர்) | 2. திரு. K. நவரத்தினம் (ஆசிரியர்) |
| 3. திரு. A. கதிர்காமசேகரன் (ஆசிரியர்) | 3. திரு. A. இரகுநாதன் (ஆசிரியர்) |

நடுவர் திரு. S. சிவலிங்கராசா அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை யாழ். பல்கலைக் கழகம்)

நள்ளிரவு 12.00 மணி தொடக்கம் 3.00 மணி வரை விசேட அபிஷேகங்கள்
பின்னிரவு 3.00 மணி தொடக்கம்

யாழ்ப்பாண நாட்டார் வழக்கியல் கழகத்தின்
யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் பங்கேற்கும் **''சத்தியவான் சாவித்திரி''**
(புராண இசை நாடகம்)
தயாரிப்பு, நெறியாள்கை: பேராசிரியர் இ. பாலசுந்தரம்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

(9225) - விழாக் குழுவினர்

# பட்டிமன்றம்
(பாட்டால் பட்டிமன்றம்)
தத்துவ அர்த்தங்கள் மேலோங்கி நிற்பது எவர் பாடலில்?

| கவிஞர் பட்டுக்கோட்டையார் | கவிஞர் கண்ணதாசன் |
|---|---|

அ. குமாரவேல் B. A.
பொன். மதிமுகராசா J. P. பொன். கணேசமூர்த்தி
செ. சத்தியமூர்த்தி B. Sc. கனக. நாகேஸ்வரன் M. A.
K. S. முத்துலிங்கம் ஆசிரியர் க. கணேசலிங்கம் ஆசிரியர்
பசு. ஸ்ரீபதி ஆசிரியர் S. யோகலே ஆசிரியர்
திரு. சிவனேசன் ஆசிரியர் S. கணேசலிங்கம் ஆசிரியர்
M. S. தயாளன் B. A.

வண்ணை ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோவில்
## கிருஸ்ண ஜெயந்தி
பகல் விசேட அபிசேக ஆராதனை
இரவு சுவாமி வீதி உலா காட்சியும்.
காலம்: 29-08-94 திங்கட்கிழமை இரவு 10 மணி
தெய்வீகப் பேருரை
வாகீச கலாநிதி கனக. நாகேஸ்வரன்
''பள்ளிகொண்ட பரந்தாமன்''

தாமரை வீதி, வண்ணார்பண்ணை. திருவிழா உபயகாரர்
(சி-10196)



இப்பத்திரிகை யாழ்ப் பாணம் மகேந்திரா வீதி 31ம் ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.